Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00


நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல. 32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய் வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 077

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆடி – 21 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ–ஆகிர் 29 (06.08.2005) சனிக்கிழமை இதழ்:310

# சொந்தப் பாதுகாப்புடன் புலிகளின் கிழக்குக்கான பயணம் ஆரம்பம்!







## அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

கிளிநொச்சி ——

போராளிகளின் பாதுகாப்பான பயணத்துக்கு அரசு உத்தரவாதம் கொடுக்காததால் - 14 நாட்கள் காலக்கெடுவின் பின்னர், புலிகள் சுயமான பாதுகாப்புடன் - இராணுவச் சோதனைச்சாவடிகளில்லாத வழிகளினூடாக பயணங்களை மேற்கொண்டு வருவதாகவும் -

இந்தப் பயணத்தை படையினர் தடுத்தால் நிலைமை மோசமடையும் என்றும் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நோர்வே பிரதி வெளிவிவகார (02 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றிரவும் ஊரடங்கு!

யாழ்ப்பாணம் ——

யாழ்.குடாநாட்டில் நேற்று இரவு 10 மணிமுதல் மீண்டும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு- இன்று அதிகாலை 5 மணிவரை நடைமுறையில் இருக்கும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இணுவிலில் இடம்பெற்ற சம்பவங் (12 ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணைக்குழு யாழ். வந்தது!

கொழும்பு ——

இணுவிலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக இராணுவப் பொலிஸார் விசாரணைகளை நடத்திவரும் அதேவேளை - விசேட விசாரணைக் குழுவொன்றை இராணுவத் தளபதி நேற்று யாழ்ப்பாணம் அனுப்பியிருந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் நிலைய வீதி தடை!

யாழ்ப்பாணம் ——

யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள மணிக்கூட்டு வீதி, யாழ்.மத்திய கல்லூரி வடக்கு வீதி, பொதுநூல் நிலையத்துக்கு முன்பாகவுள்ள வீதிகளை பொலிஸார் மீண்டும் தடைசெய்துள்ளனர்.

இந்த வீதியூடாக எந்தப் போக்குவரத்தும் இடம்பெறாதபடி முட்கம்பிகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பொலிஸாரின் கெடுபிடிகளால் யாழ்.குடாநாட்டில் பதற்றநிலை!


யாழ்ப்பாணம் ——

இணுவில் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்களையடுத்து நேற்றுமுன்தினம் இரவு ஊரடங்குச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்த பொலிஸார் -

நேற்றுக்காலை குடாநாடு முழுவதும் வீதிப் போக்குவரத்தைத் தடை செய்தும், வாத்தக நிலையங்கள், பாடசாலைகள், அலுவலகங்களை மூடுமாறும் பணித்ததால் இயல்புநிலை முற்றாகப் பாதிக்கப்பட்டதுடன் பொதுமக்கள் மத்தியில் பதற்றமானதொரு நிலை காணப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு யாழ்.அரச அதிபரின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலை 5 மணிவரை நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், நேற்றுக்காலை குடாநாட்டின் அனைத்துப் (12 ஆம் பக்கம் பார்க்க)



## சந்திரிகா கண்டனம்!

கொழும்பு ——

யாழ்ப்பாணம் - இணுவிலில் இடம்பெற்ற சம்பவங்களை ஜனாதிபதி சந்திரிகா கண்டித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் -

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு இராணுவத்தினரும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் மா அதிபர் இன்று வருகிறார்!

கொழும்பு ——

இணுவிலில் கடத்தப்பட்டு கொல்லப்பட்ட பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தனவின் கொலை பற்றிய விசாரணையை இரகசிய பொலிஸார் மேற்கொள்ளவுள்ளனர்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகிந்த பெத்தவெல விசாரணையை மேற் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இறுதிச்சடங்கு நாளை!

கொழும்பு ——

இணுவிலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தின்போது- பொதுமக்களின் தாக்குதலுக்குள்ளாகி பின்னர்- வெட்டிக் கொல்லப்பட்ட பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தனவின் பிரேத பரிசோதனை நேற்று குருநாகல் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மக்களை நெருக்கடிக்குள் தள்ளுவதை படையினர் தவிர்த்துக்கொள்ள வேண்டும்!

## யாழ்.மாவட்ட படைத்தளபதியிடம் புலிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ——

யாழ். மாவட்ட இராணுவத் தளபதிக்கும், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறையினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மாலை 5 மணிக்கு யாழ். மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் றொனி தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் - விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, சுனாமி செயலகக் குழுவின் பணிப்பாளர் பாலையா, கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ரவிராஜ் ஆகியோரும் - இராணுவத் தரப்பில் யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனும் கலந்து கொண்டார்.

இந்தச் சந்திப்பின்போது நேற்று இணுவில் சந்தியில் - சிகை அலங்கரிப்பு நிலையத்தில் பணியாற்றிய பணியாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவமும் அதனைத் தொடர்ந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாட்டு நிலவரம் குறித்து

# ஹெல்கிசனுக்கு சந்திரிகா எடுத்து விளக்கினாராம்!

யாழ்ப்பாணம் ——

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற துப் பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டதுடன் - பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனுக்கு ஜனாதிபதி சந்திரிகா விளக்கிக் கூறினார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

உத்தேச பொதுக்கட்டமைப்பு தொடர்பான உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக் குறித்த விபரத்தை ஜனாதிபதி சந்திரிகா ஹெல்கிசனுக்கு எடுத்துக் கூறினார். இந்த நிலையில் இதனை முன்னெடுத்துச் செல்வதற்கு முஸ்லிம் கட்சிகளின் ஒத்துழைப்புக் குறித்தும் ஹெல்கிசனுக்குத் தெளிவு படுத்தினார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு சிப்பாய்களுக்கும் விளக்கமறியல் உத்தரவு!

யாழ்ப்பாணம் ——

இணுவில் சந்தியிலுள்ள சிகையலங்கரிப்பு நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிப்பிரயோகத்துடன் தொடர்புடையவர்களென சந்தேகிக்கப்படும் இரண்டு இராணுவச் சிப்பாய்களை, எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிவான் சறோஜினி இளங்கோவன் உத்தரவிட்டார். நீதிவானின் வாசஸ்தலத்தில் நேற்று மாலை சுன்னாகம் பொலிஸார் இந்தச் சிப்பாய்களை ஆஜர்செய்தனர்.

வன்னிநாயக்க மற்றும் தயானந்த ஆகிய இரு சிப்பாய்களுமே சுன்னாகம் பொலிஸாரால் ஆஜர் செய்யப்பட்டனர்.

சிகையலங்கரிப்பு நிலையம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட வேளை இவர்கள் இருவரும் சிகையலங்கரிப்பு நிலையத்திற்கு வெளியே ஆயுதங்களுடன் நின்றிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இணுவில் சந்தியில் நடந்த சம்பவம் தொடர்பாக நாளை மறுதினம் மல்லாகம் மாவட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

# போர்நிறுத்த உடன்பாடு மீளாய்வு இப்போதைக்கு தேவையில்லை!

## விதார் ஹெல்கிசன் தெரிவிப்பு



கொழும்பு ——

கடந்த மூன்று வருடங்களாக நடைமுறையிலிருக்கும் போர்நிறுத்த உடன்படிக்கையை மாற்றியமைக்கத் தேவையில்லை என்று இலங்கை வந்துள்ள நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்தார்.

சமாதான நடவடிக்கையை மறுமதிப்பீடு செய்யவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க என்னிடம் விருப்பம் தெரிவித்தார்.

ஆனால், விடுதலைப் புலிகளைச் சந்தித்த பின்னர் ஏற்கனவே நடைமுறையில் உள்ள உடன்படிக்கையை அமுல்படுத்துவதில்தான் இரு தரப்பினரும் இப்பொழுது கவனம் செலுத்த வேண்டும் என்பதை உணரமுடிந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சொந்தப் பாதுகாப்புடன்...

அமைச்சர் விதார் ஹெல்கிசனுட னான சந்திப்பின் பின்னர் செய்தியா ளர்களிடம் பேசும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரி விக்கையில் -

தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக் கடியான நிலைமைகளில் இந்தச் சந் திப்பு இடம்பெற்றுள்ளது. நெருக்கடி நிலையின் தீவிரத்தன்மை பற்றி நாம் எடுத்துவிளக்கியுள்ளோம். யுத்தநிறுத்த உடன்பாடு பாரிய நெருக்கடிக்குள் உள் ளாக்கப்பட்டிருப்பது தொடர்பாகவும், சமா தான முயற்சிகளில் எமது மக்கள் முழு மையாக நம்பிக்கையிழந்து நிற்கின்ற சூழல், அதன் வெளிப்பாடுகள் பற்றி யும் தெளிவாக விளக்கியுள்ளோம்.

யாழ்ப்பாணம் மட்டுமல்ல - தமிழர் தாயகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகள் பற்றிக் கலந்துரையாடியுள்ளோம். அத்துடன், யாழ்ப்பாண நிலைமைகள் தொடர்பாக தெளிவாக விளக்கியுள்ளோம்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதே சங்கள் என்று சொல்லப்படுகின்ற பகுதி களில் - இராணுவ நெருக்குவாரங்கள், அச்சுறுத்தல், கொலை முயற்சிகள் தொடர்ந்து இடம்பெறுவதால் மக்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. அதன் வெளிப்பாடாகத்தான் இணுவி லில் நடந்த சம்பவங்களையும் பார்க் கிறோம்.

யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச்சட் டம் பிறப்பிக்கப்பட்டு, போக்குவரத்துக் கள் முழு அளவில் முடக்கப்பட்டுள்ள நிலையில், எமது போராளிகளுடன் தொடர்புகொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாதவாறு பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவர நாம் முயற்சிகள் மேற்கொண்டவண்ணம் உள்ளோம். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி என்ப தால் இராணுவமும், அதன் சட்ட ஒழுங்குகளைப் பேணுகின்ற அமைப் புக்கள் மூலமும்தான் நிலைமை களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம் என நினைக்கிறேன்.

இராணுவமே பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் எந்தளவு தூரம் நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம் என்பதை எம்மால் கூறமுடியாதுள்ளது. கண்காணிப்புக் குழுவுடனும், ஏனைய சம்பந்தப்பட்ட வர்களுடனும் தொடர்புகளைப் பேணி வருகிறோம்.

விவாதிக்கப்பட்டு - கருத்துக்கள் பரிமாறப்பட்டு, நடைமுறைச்சாத்திய மான முறையில்தான் போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது. இருதரப்பும் ஏற் றுக்கொண்ட உடன்படிக்கை என்ற வகையில் - ஏற்றுக்கொள்ளப்பட்ட விட யங்களை உடனடியாக நடைமுறைக் குக் கொண்டுவருவதுதான் தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைமை யைத் தணிக்க உதவும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் உள்ள விடயங்கள் உடனடியாக நடை முறைப்படுத்தப்படவேண்டும்.

இதில் மிகமுக்கியமானது இயல்பு நிலையை ஏற்படுத்துவது - அதாவது இராணுவ நெருக்குவாரங்களை நீக்கி, மக்கள் தங்கள் சொந்த இருப்பிடங் களுக்குச் செல்லவும், சுதந்திரமாக நட மாடவும், தமது வாழ்வைப் பேணிக் கொள்வதற்கும் இயல்புநிலையைக் கொண்டுவருவது. போர்நிறுத்த உடன் படிக்கையில் உள்ளதுபோன்று ஆயு தக்குழுக்களின் நடவடிக்கைகள் உட னடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகள் தான் போர்நிறுத்த உடன்படிக்கையை கேள்விக்குறியாக்கியுள்ளது. உடனடி யாகவே ஆயுதக்குழுக்களின் செயற் பாடுகள் நிறுத்தப்படவேண்டும். ஆயு தங்கள் களையப்பட்டு, நிலைமைகள் சீர்செய்யப்படவேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

முக்கியமாக எமது மக்களின் மனி தாபிமானப் பிரச்சினை - இருதரப்பும் இணைந்து உருவாக்கிய பொதுக் கட் டமைப்பு தற்போது செயலிழந்துள் ளது.

இந்த நிலையில், எமது தாயகப் பிரதேசத்தில் - மனிதாபிமானப் பணி களுக்கு சர்வதேச சமூகம் இலங்கை அரசைப் பார்த்துக் கொண்டிருக்க முடி யாது. உடனடியாக விடுதலைப் புலிக ளோடு ஒரு ஏற்பாட்டைச் செய்து எமது மக்களுக்கான உதவிகளைக் கொண்டு வரவேண்டும். இந்த நல் லெண்ணச் செயற்பாடுகளே நிலை மைகளை ஓரளவுக்குத் தணிப்பதற்கு உதவும் என்ற சூழலை இன்றைய சந்திப்பில் விளக் கியுள்ளோம்.

போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்துப் பற்றிய நடைமுறை கள் பற்றித் தெளிவாக கண்காணிப்புக் குழு ஊடாக அரசுக்கு அனுப்பியிருந் தோம். ஆனால், அவற்றை முழுமை யாக ஏற்றுக்கொண்டு அரசு பதில் தர வில்லை. ஆளணி எண்ணிக்கை யைக் குறைத்தும், பணிமாற்றக் கட் டுப்பாடுகளை கொண்டு வந்ததன் கார ணத்தால் எமது தலைமைப்பீடத்தால் அரசின் பதில் ஏற்றுக்கொள்ளப்பட்டி ருக்கவில்லை.

இந்தச் செயலையும் கண்காணிப் புக் குழு ஊடாக அனுப்பியுள்ளோம். புதிய நடைமுறைகளை அரசு கடந்த புதனன்று அனுப்பியுள்ளது. அது எமது தலைமைப்பீடத்தின் பரிசீலனையில் தான் உள்ளது. அதில் அம்பாறை மாவட்டப் பயண ஒழுங்கு பற்றிக் குறிப் பிடப்படாததால் தற்போது அது பற்றிய விளக்கத்தைக் கேட்டிருக்கிறோம். அது பற்றிய பதில் வந்தால் மேலதிக மாகக் கூறமுடியும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை கள் போணப்படவில்லை என்பது இன்று சர்வதேச சமூகம் அறிந்த உண்மை. உண்மைகளை எமது மக்களும் புரிந்துள்ளார்கள். எந்தத் தரப்பு நடைமுறைகளைப் பேண வில்லை என்பது யாவரும் அறிந்த உண்மை.

உடன்படிக்கையில் ஏற்றுக்கொள் ளப்பட்ட நடைமுறைகளை உடனடி யாக நடைமுறைப்படுத்த வேண்டும். விடுதலைப் புலிகள் அந்த நடை முறைகளைப் புறந்தள்ளியிருந்தால் அதைச் சுட்டிக்காட்டலாம். அதற்கு எமது தலைமைப்பீடம் உடனடி நட வடிக்கை எடுக்கும்.

பொதுக்கட்டமைப்பு நீண்ட கால மாக விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப் பட்டது. பொதுக்கட்டமைப்பில் உள்ள விடயங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்தால் போதுமானது. நிபந்தனைகளையோ, கோரிக்கை களையோ முன்வைக்க வேண்டிய தேவை எமக்கில்லை.

தமிழீழத்தின் அனைத்து மக்க ளுமே எமது தலைமைப் பீடத்துக்கு தமது கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார்கள். மக்கள் - தமக்குத் தீர்வு வேண்டும் என்பதே கோரிக்கையாக உள்ளதுடன், மக்களின் அபிலாஷை களுக்கு மதிப்பளிக்க வேண்டிய நிலை யில் எமது தலைமைப்பீடம் உள்ளது. சர்வதேச சமூகத்திற்கும் எமது மக்கள் தமது செய்திகளை வெளிப்படுத்தி வருகிறார்கள். அதேபோன்று எமது தலைமைப்பீடத்திற்கும் தமது உணர் வுகளை வெளிப்படுத்தி வருகிறார்கள். இந்த நிலைமையைத் தெளிவுபடுத்தி யுள்ளோம்.

சிங்கள தேசம் தமக்குத் தீர்வைத் தராது என்பதில் தமிழ்மக்கள் உறுதி

(12ஆம் பக்கம் பார்க்க)

# இணுவிலில் இருவர் கொல்லப்பட்டமைக்கு இராணுவத்தினரே முழுப்பொறுப்பு!

## கஜேந்திரன் எம்.பி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் —

பொதுமக்களின் உணர்வுகளுக் கும், போர்நிறுத்த உடன்படிக்கைக் கும் மதிப்பளித்து படையினர் மக்கள் குடியிருப்புக்களில் இருந்து உடனடி யாக வெளியேற வேண்டும். அத்துடன், மக்கள் வாழ்விடங்கள் மற்றும் பொது இடங்களில் நடமாடுவதை தடுப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண் டும். இதன் மூலம் எதிர்காலத்தில் இணுவில் பகுதியில் நடைபெற்றது போன்ற சம்பவங்கள் ஏற்படுவதை தடுக்க முடியும்.

இவ்வாறு தமிழ்த்தேசிய கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இணுவில் சந்தியில் சிகை அலங்கரிப்பு நிலை யம் ஒன்றில் பணியாற்றிக்கொண் டிருந்த இளைஞன், இரா ணுவத்தின ரின் கண்மூடித்தனமான தாக்குத லில் உயிரிழந்த சம்பவத்தைக் கண் டித்து வெளியிடப்பட்ட அறிக்கையி லேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள் ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது -

நேற்றுமுன்தினம் (04.08. 2005) இணுவில் பகுதியில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையத்தின்மீது சிங்களப் படைச் சிப்பாய்கள் மேற் கொண்ட திட்டமிட்ட துப்பாக்கிப் பிர யோகத்தில் ஜெயசீலன் சாந்தரூபன் என்ற சிகை அலங்கரிப்புத் தொழி லாளி கொல்லப்பட்டதுடன், கே.லோக நாதன் என்ற தொழிலாளி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தக் கொலைச் சம்பவம் அப்பட்டமான போர்நிறுத்த மீறல் என்பதுடன், மனித உரிமை மீறலுமாகும். சம் பவத்தினை அறிந்து அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் பொதுமக்கள் முன் னிலையில் சம்பவம் நடைபெற்ற இடத்தில் காணப்பட்ட வெடிக்காத சில ரவைகள், வெடித்த ரவையின் கவர் கள் உள்ளிட்ட தடயங்களை அப் புறப்படுத்த முயன்றபோது பொதுமக் களுக்கும் பொலிஸாருக்குமிடையில் மோதல் உருவானது. படைத்தரப் பின் தவறுகளை மறைப்பதற்காக பொலிஸார் முயன்றுள்ளனர். நீதிபதி ஒருவர் சம்பவ இடத்தை நேரில் பார் வையிட்டு தடயங்களைப் பதிவு செய் யும்வரை தடயங்களை அகற்றக் கூடாது எனக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது பொலி ஸார் கண்ணீர்ப்புகை மற்றும் குண் டாந்தடியடிப் பிரயோகமும் மேற் கொண்டுள்ளனர்.

அதுமட்டுமன்றி பொதுமக்களின் பல சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள் களையும் அடித்து நொருக்கியுள்ள னர்.

கடந்த காலங்களில் சமாதான உடன்படிக்கையின் பின்னர் பல சந் தர்ப்பங்களில் பொதுமக்கள் சிங்கள ஆயுதப் படைகளால் தாக்கப்படுவ தும், படையினரின் வாகனங்களால் மோதிக் கொல்லப்படுவதும், காயப் படுத்தப்பட்டு வருவதும், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் விரட்டப் படுவதும் அவற்றுக்கெதிராக அவ்வப் போது பொதுமக்கள் எதிர்ப்புப் போரா ட்டங்களை நடத்துவதும், அவ்வப் போது பொலிஸார் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடை பெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் குற்றவாளிகளைக் கைதுசெய்து நீதிமன்றில் நிறுத்தித் தண்டிப்போம் என்று வாக்குறுதி வழங்குவதும், பாதிக்கப்பட்ட மக்கள் நீதி கிடைக்காது ஏமாற்றப்படுவதும் தொடர்கதையாகவே உள்ளது.

இந்த நிலையில் நீதித்துறை மீதும், நீதிமன்றங்கள் மீதும், சட்டங் கள் மீதும், சட்ட ஒழுங்கை நிலை நாட்ட வேண்டிய பொலிஸார் மீது பொதுமக்கள் நம்பிக்கை இழந்த நிலையில், பொதுமக்கள் சட்டத்தி னைக் கையில் எடுத்து தாமே தண் டனை வழங்கும்நிலை உருவாகியுள் ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கை யினை மதித்து ஆயுதப் படைகள் மக்கள் வாழ்விடங்களில் இருந்து வெளியேறியிருந்தால் நேற்றுமுன் தினம் இந்தத் துயரச் சம்பவம் நிச்சய மாக நிகழ்ந்திருக்காது. ஆயுதப்படை யினர் பொதுமக்களின் எதிர்ப்புக்கு அஞ்சி ஊரடங்குச் சட்டத்திதை அமுல் படுத்தியதால் குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டு விவசாயிகளுக்கும், மீன வர்களுக்கும், ஏனைய வர்த்தகர்க ளுக்கும் பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

ஊடரடங்குச் சட்டத்தினை அமுல் படுத்தாது ஆயுதப்படைகள் முகாமுக் குள் முடங்கி இருந்திருந்தாலே ஏற் படக்கூடிய எல்லா விபரீதங்களையும் தடுத்து பொதுமக்களின் இயல்பு வாழ் விலும் குந்தகம் ஏற்படுத்தப்படாமல் இருந்திருக்கும். எதிர்காலத்தில் இவ் வாறான சம்பவங்கள் நடைபெறா திருக்க சம்பந்தப்பட்டவர்கள் உடனடி யாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பொதுமக்களின் உணர்வுகளுக் கும், போர்நிறுத்த உடன்படிக்கைக் கும் மதிப்பளித்து ஆயுதப்படைகள் மக்கள் குடியிருப்புகளில் இருந்து உடனடியாக வெளியேறுவதற்கும் மக்கள் வாழ்விடங்கள், பொது இடங் களில் ஆயுதங்களுடனோ, ஆயுதங்க ளின்றியோ நடமாடுவதனைத் தடுப் பதற்கும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுவே எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடை பெறாதிருப்பதனை உறுதிப்படுத்த ஒரேவழி. அதனை விடுத்து பொது மக்களைப் பழிவாங்கும் நோக்கில் அப்பாவிப் பொதுமக்களைக் கைது செய்து பொய்க்குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி சித்திரவதை செய்து சிறை வைக்க முயன்றால் அதன் விளைவுகள் பாரதூரமாக அமையும்.

இந்தக் கொலைக்கு படையினரே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண் டும். மேற்படி சிகை அலங்கரிப்பு தொழிலாளி படுகொலை செய்யப் பட்ட சம்பவத்தினை நாம் மிக வன் மையாகக் கண்டிப்பதுடன் அவரது இழப்பால் துன்புறுவதுடன் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவித்துக்கொள்கி றேன்.

## மரண அறிவித்தல்

### நல்லதம்பி பொன்னுத்துரை (sp)

தாவடியைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி பொன்னுத்துரை அவர்கள் 05.08.2005 நேற்று காலமானார்.

அன்னார் சரோஜினிதேவியின் அன்புக் கணவராவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 06.08.2005 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

மில் ஒழுங்கை,
மல்லாகம். (இ)

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்.

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு! காதல் புகழ் பரத், ரேணுகா மேனன்

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இன்னும் சில நாட்கள்
அக்சன் கிங் அர்ஜுன், சிநேகா நடித்த

சின்னா
காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் மற்றும் லதா, நாகேஸ் நடித்த
உரிமைக் குரல்
பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்
காட்சிகள் :11.00, 2.45, 6.00 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
இரண்டாவது வெற்றிவாரம்
இலங்கையிலும் இந்தியாவிலும்ஒரேதின வெளியீடு
மாதவன், சதா மற்றும் பலர் நடித்த
பிரியசகி

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு!
ஜெயம்ரவி, ரேணுகாமேனன், வடிவேலு மற்றும் பலர் நடித்த

தாஸ்
காட்சிகள்:- 11.00,3.00, 7.00,10.00 (பழைய நேரம்)

பலரின் வேண்டுகோளுக்கிணங்க
நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
நடாத்தும் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான
முன்னோடிக் கருத்தரங்கு
இடம்:– மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
காலம்:– 08.08.2005 திங்கட்கிழமை
நேரம்:– காலை 9.00 மணிமுதல்
மாலை 3.00 மணிவரை
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அனுசரணை வழங்குவோர்

குமரகுரு புடவை
அழகுப் பொருள் வாணிபம்
T.P - 021-228 5971 யாழ்சாலை,கிளிநொச்சி.


# புத்தர் சிலை விவகாரம் குறித்து இரண்டொரு நாட்களில் முடிவு!

## கண்காணிப்புக்குழு உறுதிமொழி

திருகோணமலை—

தமிழ் மக்கள் பேரவையினரின் கோரிக்கைகள் தொடர்பாகத் திருகோணமலை மாவட்டத்தின் புதிய இராணுவத் தளபதியுடன் அடுத்த இரண்டொரு தினங்களில் பேச்சுவார்த்தை நடத்தி, நல்லதொரு முடிவை அறிவிப்பதாக திருமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பொறுப்பதிகாரி ஆர்தர் தெரிவித்தார்.

திருகோணமலை நகரசபையில் அத்துமீறி நிறுவப்பட்ட புத்தர் சிலை மற்றும் இதன் பின்னரான படைக் குவிப்பு உட்பட பல்வேறு விடயங்களைச் சுட்டிக்காட்டி - திருமலை தமிழ் மக்கள் பேரவையினரால் கடிதமொன்று திருமலை மாவட்டப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் கையளிக்கப்பட்டது.

இந்தக் கடிதம் தொடர்பாக நேற்று முன்தினம் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் திருமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன், லோகநாதன் மற்றும் தயாளன் ஆகியோருக்கும், கண்காணிப்புக்குழுவின் திருமலை மாவட்டப் பொறுப்பதிகாரி ஆர்தருக்குமிடையில் நேற்று முன்தினம் மாலை 2.45 மணி தொடக்கம் 4.15 மணி வரை சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் திருமலை மாவட்டத்தில் தற்போது இராணுவத்தால் வீதித் தடைகள் போடப்பட்டு, சோதனைகள் நடத்தப்படுவதுடன், பெருமளவில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பதற்றமான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது யுத்த நிறுத்த மீறல் எனவும்,

எனவே, இதற்கான சரியான பதிலை விரைவில் தரவேண்டுமெனத் தமிழ் மக்கள் பேரவையினர் தெரிவித்தனர்.

இவற்றைக் கேட்டறிந்த கண்காணிப்புக்குழுப் பிரதிநிதி- இந்தச் சம்பவங்கள் - யுத்தநிறுத்த மீறல் என்பதை தான் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், இது தொடர்பாக திருமலை மாவட்டத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட இராணுவத் தளபதியுடன் அடுத்த இரண்டொரு தினங்களில் கலந்துரையாடி, வெகுவிரைவில் நல்ல பதிலைத் தருவதாகவும், அதுவரை தமிழ் மக்கள் பேரவையினர் எந்த வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் இருக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார். (04,10)

# அரச சமாதான செயலகம் அடுத்த வருடமும் இயங்கும்

கொழும்பு—

அரச சமாதான செயலகத்தை அடுத்த வருடமும் கொண்டு நடாத்துவது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்துள்ளார்.

அதற்கான அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் மாநாட்டில் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.



ஜனாதிபதியின் கீழ் அரச சமாதான செயலகச் செயற்பாடுகள் இதன் அடிப்படையில் அடுத்தவருடமும் ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம்வரை செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் அரசின் அர்ப்பணிப்புத் தன்மை இவ்வாறான முடிவுகளில் இருந்து தெளிவாக உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கு - கிழக்கு புனர்நிர்மாணப் பணிகளை விரைவுபடுத்துவதில் அரசின் கவனம் திரும்பியுள்ளது. அதன் அடிப்படையில் அரச மற்றும் அரச சார்பற்ற மட்டத்தில் செய்யப்படுகின்ற புனர்நிர்மாணப் பணிகளை விரைவுபடுத்தவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஹெல உறுமய வேட்பாளர் ஒன்பதாம் திகதி அறிவிப்பு

கொழும்பு—

ஜாதிக ஹெல உறுமயவின் ஜனாதிபதி வேட்பாளரை இந்த மாதம் 9 ஆம் திகதி அறிவிப்பதற்கு, அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது. இதற்கென ஜாதிக ஹெல உறுமயவின் மத்திய செயற்குழு 9 ஆம் திகதி காலை கூடவுள்ளது.

ஏனைய கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்களிடம் ஜாதிக ஹெல உறுமய அதன் பஞ்ச கொள்கை விதிகளை முன்வைத்து அந்தக் கொள்கைகளை எந்த வேட்பாளராவது ஏற்றுக்கொள்வாராயின், ஜாதிக ஹெல உறுமய தனது ஆதரவை அந்த வேட்பாளருக்கு வழங்கும் என அறிவித்திருந்தது.

பஞ்ச கொள்கை விதிகளை முன்வைத்து, ஒரு வாரத்துக்கும் மேல் கடந்த நிலையிலும் எந்தவொரு கட்சியிடமிருந்தும் தங்களுக்கு சாதகமான பதில் கிடைக்காததால், ஜாதிக ஹெல உறுமய தங்கள் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை நியமிக்க தீர்மானித்ததாக அந்தக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

# அரசாங்கத்தைவிட்டு விலகுவதற்கு ஜே.வி.பி. அவசரமுடிவு எடுத்துவிட்டது

## அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா

கொழும்பு—

கூட்டணியை ஏற்படுத்தியது சமாதான நடவடிக்கைகளை உடைதெறிவதற்கல்ல. யுத்தத்தால் கெரில்லா அமைப்புகளுக்குக் கிடைக்கும் நன்மைகள் அதிகம்.

சமாதானத்தின் மூலமே கெரில்லா அமைப்புகளை தாக்க முடியும் என, ரயில்வே அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

ஜே.வி.பி அரசாங்கத்தை விட்டுச் செல்ல அவசரப்பட்டு விட்டது. ஜே.வி.பி தனது கட்சியைக் கட்டியெழுப்ப முயல்வதைப் போலவே, நாமும் எமது கட்சியை கட்டியெழுப்ப முயல்கிறோம். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால், ஜே.வி.பிக்கு ஏற்படும் நிலை என்ன என்பது பற்றி நினைத்துப் பார்க்க வேண்டும்.

நாம் தனித்துவிட்டால் தோற்கவும் கூடும். ஜே.வி.பியுடன் இணைந்ததாலேயே எமக்கு ஆட்சியதிகாரம் கிடைத்தது.

பிரதான கட்சியுடன் இடது சாரிக் கட்சிகள் இணைந்தால், எம்மால் வெற்றி பெற முடியும் என்பதையே அது எடுத்துக் காட்டுகிறது. இந்தத் தேர்தல் முறைக்கமைய எந்தவொரு கட் சிக்கும் இனிமேல் பெரும்பான்மை அதிகாரம் கிடைக்காது. இந்த அரசியலமைப்பை மாற்ற ஐக்கிய தேசியக் கட்சிக்கு விருப்பமில்லை. எதிர்காலத்தில் ஜனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்தியே அரசாங்கத்தைக் கொண்டு நடத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

# பிந்திய திகதியிட்டு வர்த்தமானியை அரசாங்க அச்சகம் அச்சிடவில்லை!

## அரச அச்சகத் தலைவர் மறுப்பு

கொழும்பு—

பிந்திய திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலொன்று அச்சிடுதல் உலகில் எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் நடந்திராத, இனிமேலும் நடக்காத செயற்பாடென்றும் அரச அச்சகம் அவ்வாறு பிந்திய திகதியிட்ட வர்த்தமானி அறிவித்தலொன்றை எந்த வகையிலும் அச்சிடப் போவதில்லை என்றும், அரச அச்சகத் தலைவர் லக்ஸ்மன் குணவர்த்தன தெரிவித்தார்.

அரசுத் தலைவர் 2000 ஆம் ஆண்டு பதவிப் பிரமாணம் செய்துகொண்டார் என்பதை உறுதிப்படுத்துவதற்காகப் போலி வர்த்தமானி அறிவித்தலொன்று அச்சிடப் போவதாகக் கடுவெல ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் சட்டத்தரணி சுஜீவசேரசிங்க - பொறளை பொலிஸாரிடம் செய்துள்ள முறைப்பாடு தொடர்பாகக் கேட்டபோதே, அச்சகத் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிடுவதென்பது - ஒருவர் மட்டும் மேற்கொள்ளும் செயற்பாடல்ல. அதற்கென ஒரு நிர்வாகக் கட்டமைப்பு உள்ளது.

அரச அச்சகத்துக்குக் கிடைக்கும் ஆவணம் - வர்த்தமானி அறிவிப்பு பிரிவுக்கு அனுப்பப்பட்டு, அவர்கள் அங்கு தேவையான தகவல்களைச் சேர்த்த பின்னர் அதனைத் திருத்துநரிடம் அனுப்பவேண்டும்.

அந்த ஆவணத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக குறைந்தபட்சம் 3 அதிகாரிகளாவது பணியாற்றவேண்டும்.

அரச அச்சகத்தில் இருந்து அனுப்பப்படும் அனைத்து வர்த்தமானி அறிவித்தல்களும் ஐந்துவருட காலம் அரச அச்சகத்தின் நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கும். அதன் ஒரு பிரதி கட்டாயமாக அரச பதிவாளர் திணைக்களத்துக்கு அனுப்பப்படும்.

அத்துடன், அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அரச அச்சகத்தின் இணையத்தளத்திலும் இந்த வர்த்தமானி அறிவித்தல்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

2000 ஆம் ஆண்டு அரசுத் தலைவர் பதவிப் பிரமாணம் செய்துகொண்டமை தொடர்பாக, வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடுமாறு இதுவரை எந்தவொரு ஆவணமும் தனக்கு அனுப்பப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை - இந்த முறைப்பாட்டுக்கமைய நேற்று முன்தினம் பொறளை பொலிஸார் அரச அச்சகத்தைச் சோதனையிட்டதாகவும் ஆனால் சந்தேகத்துக்கிடமான முறையில் அங்கு எந்தவொரு ஆவணமும் கண்டுபிடிக்கப்பட வில்லை என்றும் பொலிஸார் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

# அரசாங்க நிறுவனங்களில் நிதிமோசடி ஆணைக்குழு விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு—

அரச நிறுவனங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பாக ஜனாதிபதி விசேட ஆணைக் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

தேசிய பாடசாலைகளில் முதலாம் ஆண்டுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதில் இடம்பெற்ற முறைகேடுகள் சம்பந்தமாகவே இந்த விசேட விசாரணை ஆணைக்குழு முதலில் விசாரணைகளை மேற்கொண்டு வந்தது.

எனினும், தற்போது அரச நிறுவனங்களில் இடம்பெற்றிருப்பதாகக் கூறப்படும் நிதி மோசடிகள் குறித்தும் இந்த ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக அதன் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பிரதேச செயலகங்கள், மாகாண சபைகள், மகாவலி அதிகார சபை, ஆயுர்வேத கூட்டுத்தாபனம் உட்பட்ட, அரச நிறுவனங்களிலும், சில பாடசாலைகளிலும் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடிகள் குறித்து தாங்கள் விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாக அந்தப் பேச்சாளர் தெரிவித்தார்.

குறிப்பாகத் திட்டங்களை ஆரம்பித்து செயற்படுத்தல், மற்றும் குறைந்த தரத்துடன் அவற்றைக் கொண்டு நடத்தல் என்பன குறித்தே தங்களுக்கு அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## முத்தலிப் கொலை:

# சந்தேகநபர் சஞ்ஜீவ மீதான குற்றச்சாட்டுகள் கையளிப்பு

கொழும்பு—

இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி லெப்.கேணல் முத்தலிப் கொலையுடன் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மீதான குற்றச் சாட்டுக்கள் அடங்கிய சாட்சியங்களின் தொகுப்பொன்று கொழும்பு மேலதிக நீதிவான் கிஹான் பிலபிட்டியவிடம் கையளிக்கப்பட்டது.

முத்தலிப் கொலை சந்தேக நபரான இந்துருகொல்ல விதான ஆராச்சிகே சஞ்ஜீவ என்பவர் மீதான குற்றச்சாட்டுகள் சம்பந்தமான சாட்சியங்களையே கடந்த புதன்கிழமை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிவானிடம் கையளித்தனர்.

சஞ்ஜீவவுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்த பெண்மணியிடமும், அவரின் மகன் மற்றும் சாரதியிடமிருந்தும் இந்தச் சாட்சியங்கள் பெறப்பட்டன.

ரன்பொகுனுகம எனும் இடத்தில் சஞ்ஜீவ என்பவர் வீடொன்றை வாடகைக்கு எடுத்திருந்ததாகவும்,

முத்தலிப் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் ராஜன், உதயன், சசி ஆகியோர் இந்த வீட்டுக்கு அடிக்கடி வந்து சென்றிருப்பதாகவும், இவர்கள் இந்த வீட்டில் ஆயுதங்களை மறைத்துவைத்திருந்தார்கள் என்றும், இவர்களிடமிருந்து பெறப்பட்ட சாட்சியங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

இந்த 3 தமிழ் சந்தேகநபர்களுடன் சஞ்ஜீவ அடிக்கடி வன்னிக்குச் சென்று வந்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

முத்தலிப்பைக் கொலை செய்வதற்கு இவர்கள் திட்டமிட்டு வந்தமையை சஞ்ஜீவ அறிந்து வைத்திருந்தாரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

# சபை முதல்வர் பதவியிலிருந்து மைத்திரிபால சிறிசேன விலகல்

கொழும்பு —

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் சிரேஷ்ட அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன - சபை முதல்வர் பதவியிலிருந்து விலகினார்.

இந்தத் தகவலை கடந்த புதன்கிழமை இரவு உறுதிப்படுத்திய அமைச் சர் சிறிசேன - தன்னுடைய பதவி விலகல் கடிதத்தைக் கடந்த வெள்ளிக்கிழமை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் கையளித்திருந்தார்.


இருந்த போதிலும், இவரது பதவி விலகலைப் பிரதமர் ஏற்க மறுத்துவிட்டதாகத் தெரியவருகிறது.

தன்னுடைய அதிகரித்த வேலைப் பளு காரணமாகவே தான் பதவியைத் துறக்க முன்வந்ததாக அமைச்சர் சிறிசேன தெரிவித்தார்.

ஒரு அமைச்சர் என்ற முறையில் மட்டுமன்றி, ஜனாதிபதி தேர்தல் விரைவில் வரலாம் என எதிர்பார்க்கப்படுவதாலும், தன்னுடைய வேலைப் பழு அதிகரித்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தேர்தலுடன் தொடர்புபட்ட வேலைகளில் மூன்று அமைச்சுக்களுடன் சம்பந்தப்பட்ட வேலைகளைத் தான் கவனிக்க வேண்டியிருப்பதால், சபை முதல்வர் பதவியிலிருந்து தன்னை விடுவிக்குமாறு பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அவர் கேட்டுள்ளார்.

# ஆஷஸ் டெஸ்ட் இரண்டாவது போட்டி:
# இங்கிலாந்து 407 ஓட்டங்கள் குவிப்பு!



எட்பாஸ்டன் —

எட்பாஸ்டன் டெஸ்டில் மக்ரா இல்லாதது இங்கிலாந்துக்கு சாதகமாக அமைந்தது. தொடக்கத்தில் ட்ரெஸ்கொதிக் அடுத்து பிளின்ரொப், பீற்றர்சன் ஆகியோர் அதிவிரைவாக ஓட்டங்களைச் சேர்க்க, இங்கிலாந்து அணி ஒரே நாளில் 407 ஓட்டங்கள்



குவித்தது. அவுஸ்ரேலிய பந்துவீச்சு படுமோசமாக அமைய பவுண்டரிகள், சிக்ஸர்கள் சாதாரணமாகப் பறந்தன.

இங்கிலாந்து வந்துள்ள அவுஸ்ரேலிய அணி 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்டில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலியா 1-0 என்ற முன்னிலையில் உள்ளது. இரண்டாவது போட்டி நேற்றுமுன்தினம் எட்பாஸ்டனில் தொடங்கியது. இங்கிலாந்து அணியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. அவுஸ்ரேலிய அணியில் மக்ராவுக்கு பதிலாக கஸ்பரோவிச் வாய்ப்புப் பெற்றார்.

நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்ரேலிய கப்டன் பொண்டிங் களத்தடுப்பைத் தெரிவுசெய்தார். மக்ரா நெருக்கடி இல்லாததால் இங்கிலாந்து அபார தொடக்கம் கண்டது. ட்ரெஸ்கொதிக், ஸ்ரரஸ் முதல் விக்கெட்டுக்கு 112 ஓட்டங்களைச் சேர்த்தனர். ஸ்ரரஸ் 48 ஓட்டங்களுக்கு வோனின் பந்துவீச்சில் போல்டானார். பின்னர் கஸ்பரோவிச் ஒரே ஓவரில் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தி திருப்புமுனை ஏற்படுத்தினார். முதலில் வெளியேறிய ட்ரெஸ்கொதிக் சதமடிக்கும் வாய்ப்பை நழுவவிட்டார்.




15 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் விளாசிய இவர் 90 ஓட்டங்களை எடுத்தார். அடுத்து இயன் பெல் (6) ஆட்டமிழந்தார்.

கப்டன் வோனும் (24) வந்த வேகத்திலேயே பவிலியன் திரும்ப, இங்கிலாந்து பெரும் சரிவைச் சந்தித்தது.

இதற்குப் பின் பீற்றர்சன் - பிளின்ரொப் இணைந்து அணியை மீட்டனர். இவர்கள் ஒருநாள் போட்டியின் பாணியில் அதிவிரைவாக ஓட்டங்களைச் சேர்த்தனர். வோனின் சுழலில் 3 சிக்ஸர்களை விளாசிய பிளின்ரொப் (6 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள்) 68 ஓட்டங்களை அள்ளினார். 10 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் பீற்றர்சன் 71 ஓட்டங்களை எடுத்தார்.

பின்னர் வந்த துடுப்பாட்ட வீரர்கள் வோனின் சுழலில் வெளியேறியபோதும், ஓட்டங்களைச் சேர்க்கத் தவறவில்லை. இறுதியில் இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் 407 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பின்னர் மழை குறுக்கிட, முதல்நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.



பந்துவீச்சில் வோன் 4, கஸ்பரோவிச் 3, ஜிலெஸ்பி 2, பிரட் லீ ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

மக்ரா பயிற்சியின்போது தவறுதலாக கிரிக்கெட் பந்துமீது நடந்துவிட, வலது கணுக்காலில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து எட்பாஸ்டன் டெஸ்ட் வாய்ப்பை இழந்தார். இவரது



காயம் குணமாக குறைந்தது 6 வார காலம் தேவைப்படுமென கூறப்படுகிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு இங்கிலாந்து அணி ஒரே நாளில் 407 ஓட்டங்கள் குவித்து புதிய சாதனை படைத்துள்ளது. முன்னதாக இந்த அணி 1962இல் ஓவலில் நடந்த போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிராக ஒரே நாளில் 2 விக்கெட் இழப்புக்கு 406 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

பிளின்ரொப்பை வெளியேற்றிய போது, ஜிலெஸ்பி டெஸ்டில் தனது 250ஆவது விக்கெட்டைப் பெற்றார்.

# முன்னாள் செஸ் சம்பியனின் புதிய உலகசாதனை முயற்சி!

பால்ம் பீச் கார்டன்ஸ் —

முன்னாள் உலக செஸ் சம்பியன் சூசன் போல்கர் சாதனை மேல் சாதனை படைத்துள்ளார். சுமார் 17 மணிநேரத்தில் தொடர்ந்து 1,100 போட்டிகளில் விளையாடி கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெறக் காத்திருக்கிறார்.


ஹங்கேரியைச் சேர்ந்த போல்கர் நான்கு வயதில் செஸ் விளையாடத் தொடங்கினார். 15 வயதில் பெண்கள் தரவரிசைப் பட்டியலில் முதலிடம் பெற்றார். 1986இல் ஆண்கள் உலக சம்பியன்ஷிப் போட்டிக்குத் தகுதி பெற்ற முதல் பெண் என்ற பெருமை பெற்றார். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்பு ஆண்களுக்கான கிராண்ட் மாஸ்டர் பட்டமும் பெற்றார்.

இப்படி செஸ் அரங்கில் ராணியாகத் திகழ்ந்த போல்கருக்கு உலக சாதனை படைக்கும் ஆசை வந்தது. இதன் விளைவாக அமெரிக்காவில் உள்ள பால்ம் பீச் பகுதியில் சாதனை செஸ் போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இவரை எதிர்த்து 4 வயது முதல் 95 வயதானவர்கள் வரை நீண்ட வரிசையில் அமர்ந்திருந்தனர். போல்கர் ஒவ்வொரு செஸ் போர்டாக அங்கும் இங்கும் சென்று விளையாடினார். சுமார் 14.5 கி.மீ. தூரம் நடந்த இவர், நான்கு சாதனைகள் படைத்தார். 17 மணி நேரத்தில் 1,100 போட்டி, ஒரே நேரத்தில் அதிக போட்டியில் (326) விளையாடியது (இதில் 309 வெற்றி, 14 சமன், 3 தோல்வி), அதிக வெற்றி, அதிக சதவீத வெற்றி (96.93) என மகத்தான சாதனைகள் படைத்தார். போல்கர் தொடர்ந்து 1,131 போட்டிகளில் விளையாடி சாதித்ததாக அமைப்பாளர் பார்பரா டிமரா தெரிவித்தார்.

இவரது சாதனைகளை கின்னஸ் புத்தகம் விரைவில் உறுதிசெய்யவுள்ளது.

# விளையாட்டு




கலிபோர்னியாவில் புதன்கிழமை நடைபெற்ற அகுரா கிளாஸிக் ரெனிஸ் போட்டியில், போலந்து வீராங்கனை தோமசவுவ்ஸ்கிக்கு சிரத்தையுடன் பந்தைத் திருப்புகிறார் பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸ். இந்த ஆட்டத்தில் 6-3, 6-1 என வெற்றிபெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார் கிளைஸ்டர்ஸ்.

## இங்கிலாந்துக்கு எதிரான தொடரில்
# நடுநிலை மத்தியஸ்தர்களை பாகிஸ்தான் நியமிக்கவுள்ளது!

லாகூர் —

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் நடுநிலை மத்தியஸ்தர்களை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நியமிக்க முடிவு செய்துள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபரில் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இங்கிலாந்து அணி 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கிறது. இந்தத் தொடரில் ஒருநாள் போட்டிகளிலும் நடுநிலை மத்தியஸ்தர்களை நியமிக்க வேண்டுமென பாகிஸ்தான் வலியுறுத்தி வந்தது. இதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. ஆனாலும், போட்டியில் மோதும் இரு அணிகளின் கிரிக்கெட் சபைகள் ஒத்துக் கொண்டால்- நடுநிலை மத்தியஸ்தர்களை நியமிக்கலாமென சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவித்தது.

இதையடுத்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சார்பில் இங்கிலாந்து கிரிக்கெட் நிர்வாகத்துடன் பேசப்பட்டது. இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷகாரியர்கான் கூறுகையில் -

டெஸ்ட் மட்டுமல்லாது ஒருநாள் போட்டிகளிலும் நடுநிலை மத்தியஸ்தர்களை நியமிக்க இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் சம்மதத்தைப் பெற்றுவிட்டோமெனத் தெரிவித்தார்.

# அக்குரா கிளாஸிக் ரெனிஸ் போட்டியின் மூன்றாவது சுற்றில் சானியா தோல்வி!

புதுடெல்கி —

உலகத் தரவரிசையில் 8ஆவது இடத்திலுள்ள ரஷ்ய வீராங்கனை நாதியா பெட்ரோவாவைத் தோற்கடித்து - அகுரா கிளாஸிக் ரெனிஸ் போட்டியின் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறிய சானியா மிர்சா- மூன்றாவது சுற்றில் தோல்வியைத் தழுவினார்.

அமெரிக்காவில் உள்ள சன்டியா கோவில் புதன்கிழமை நடைபெற்ற 2ஆவது சுற்று ஆட்டத்தில் 6-2, 6-1 என்ற நேர் செட்களில் பெட்ரோவாவுக்கு அதிர்ச்சியளித்தார் உலகத்



தரவரிசையில் 59ஆவது இடத்திலுள்ள சானியா மிர்சா.

இப்போட்டித் தரநிலையில் 4 ஆவது இடத்தில் இருந்த பெட்ரோவை தரநிலையில் இல்லாத சானியா வீழ்த்தியதன் மூலம் தரவரிசையில் 47 ஆவது இடத்துக்கு முன்னேறிய போதிலும் - மூன்றாவது சுற்றில் 61 ஆவது இடத்திலுள்ள ஜப்பான் வீராங்கனையான அகிமோ மோரி காமியுடன் தோல்வியடைந்தார்.

பரபரப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் சானியா முதல் செட்டை 6-2 என்ற கணக்கில் இழந்தார். அடுத்த செட்டை அவர் மிக துடிப்புடன் ஆடி 6-4 என்ற கணக்கில் தனதாக்கினார். இதனால் கடைசி செட் மிகவும் பரபரப்பானது.

இதில் மோரிகாமி 6-4 என்ற கணக்கில் வெற்றிபெற்றார். முடிவில் சானியா போராடி 2-6, 6-4, 4-6 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்தார்.

மற்றய ஆட்டங்களில் சுகி யாமா 2-6, 6-4, 6-3 என்ற கணக்கில் ஸ்வட்லனா இனஸ்டோவாவையும், பெல்ஜியம் வீராங்கனை கிம் கிளைஸ்டர்ஸ், ஜெலினா ஜென்கோவில்லை 6-1, 6-3 என்ற நேர் செட்டிலும் தோற்கடித்து காலிறுதிப் போட்டிக்கு முன்னேறினர்.

# 5ஆவது பந்துவீச்சாளர் இன்மையே இலங்கையுடன் தோற்கக் காரணம்!

## ராவிட் கூறுகிறார்



தம்புள்ள —

5ஆவது பந்துவீச்சாளர் இல்லாததால்- இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் தோல்வியைச் சந்தித்தோம் என்று ராவிட் கூறியுள்ளார்.

முத்தரப்பு கிரிக்கெட் போட்டியின் இந்திய-இலங்கை அணிகள் மோதிய 4ஆவது ஆட்டத்தில் இலங்கை அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெறும் பட்சத்தில் இருந்து கடைசியில் தோல்வியைத் சந்தித்தது.

தோல்வி குறித்து இந்திய அணியின் கப்டன் ராவிட் கூறியதாவது -

5 ஆவது பந்துவீச்சாளர் இல்லாததே தோல்விக்குக் காரணமாக அமைந்தது. இந்தத் தோல்வியை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. 95 ஓட்டங்களில் 6 விக்கெட்டுக்களை இழந்த பின்னரும்- இலங்கை அணியைத் தோற்கடிக்க முடியவில்லையென நினைக்கும்போது அதை ஜீரணிக்க முடியவில்லை.

இலங்கையின் வெற்றிக்கு ஜெயவர்த்தன, சந்தனவின் பொறுப்பான ஆட்டமே காரணம். 6 விக்கெட்டுக்கு பின்னர் மேலும் ஒரு விக்கெட்டை வீழ்த்தியிருந்தால்கூட வெற்றி இந்தியா பக்கம் திரும்பியிருக்கும். ஜெயவர்த்தன, சந்தன இருவரும் இந்திய பந்துவீச்சை சிறப்பாக எதிர்கொண்டு ஆடினர். மைதானம் கடைசியில் துடுப்பாட்டத்துக்குச் சாதகமாக இருந்தது. பந்து எதிர்பார்த்த அளவு எகிறவில்லை.

வெற்றிக்காக நாங்கள் கடைசி வரை போராடினோம். நெஹ்ராவின் பந்துவீச்சு சிறப்பாக இருந்ததெனவும் அவர் தெரிவித்தார்.

# வடமராட்சி மட்டத்திலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி!


யாழ்ப்பாணம் —

வடமராட்சி கல்வித் திணைக்களமும், கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கமும் இணைந்து நடத்தும் 15 வயதுக்குட்பட்டவர்களுக்கான துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று விக்னேஸ்வராக் கல்லூரியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி மோதவுள்ளதுடன், இதில் தோல்வியுறும் அணி நாளை ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியுடன் மோதவுள்ளது. (12)

சென்றவாரத் தொடர்ச்சி...


# அமைச்சரின் நேர்மை!




## சிறுவர் அரங்கம்

தருவி

## சூரியன்



1. சூரியன் ஒளி வீசும்
2. சூரியன் காலையில் உதிக்கும்.
3. சூரியன் மாலையில் மறையும்.
4. சூரியன் கிழக்கில் உதிக்கும்.
5. சூரியன் மேற்கில் மறையும்.

க.ஷரோன்
ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.

அன்புக்குரிய சிறுவர்களே!

கடந்தவாரம், எங்களுடைய நல்ல எண்ணத்தைச் செயலாக்கும்போதுதான் வெற்றி கிடைக்கும் என்று எழுதியிருந்தேன்.

சிறுவர்களே! இந்த வெற்றி என்பது, ஒரு நிகழ்ச்சியில் அல்லது ஒரு பரீட்சையில் மட்டும் வெற்றி பெறுவதுடன் நின்றுவிடுவதில்லை. அதாவது, வெற்றி என்பது ஒரு பயணத்தின் முடிவு போன்றது அல்ல. எப்படி என்று கேட்கின்றீர்களா?

பெற்றோருடன் உங்களுடைய ஊரிலிருந்து யாழ்ப்பாண நகரத்துக்கு ஒரு வேலையாகச் செல்கின்றீர்கள். அங்கு சென்று எவ்வளவு விரைவாக உங்களுடைய வேலையை முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக வேலையை முடிப்பீர்கள். அதன்பின்னர் என்ன செய்வீர்கள்? மீண்டும் ஊருக்குத் திரும்பிவிடுவீர்கள். இல்லையா?


ஆனால், வெற்றி என்பது தொடர்ச்சியாக நடைபெறவேண்டிய ஒரு விடயம். இரண்டாந் தவணைப் பரீட்சையில் நல்ல புள்ளிகள் எடுத்தால் போதுமா? அடுத்தடுத்த பரீட்சைகளிலும் நல்ல புள்ளிகள் எடுக்க வேண்டும். அதனால் உங்களுடைய ஒவ்வொரு செயற்பாடுகளும் நன்றாக இருக்கவேண்டும். அப் பொழுதுதான் கிடைக்கும் வெற்றியும் மகிழ்ச்சிதரக் கூடியதாக இருக்கும்.

பாசமுடன்,
சாரு அக்கா



தென்மராட்சி முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் குடும்ப, பிரதேச, வலயமட்ட மெய்வல்லுநர் போட்டியில் 'இசையும் அசையும்' நிகழ்விலே இரண்டாம் இடத்தைப் பெற்ற மட்டுவில் மாதுமை மழலைகள் கல்விப்பூங்கா அணியினரும், இயக்குநர்களும்

# ஓவியப்போட்டியில் ஆறுதல் பரிசுபெற்ற ஓவியங்களும், ஓவியர்களின் பெயர்களும்



உ.சோபிகா
தரம் - 04
யா/விக்னேஸ்வராக் கல்லூரி.



சி.நந்துஜா தரம் - 04, யா/கரணவாய் தாமோதரம் வித்தியாலயம்

# உங்கள் கைவண்ணம்



கு.துஷ்யந்தினி
தரம் - 07
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.



சி.சபீசன்
தரம் - 05
யா/சித்திவிநாயகர் வித்தியாலயம்



# முத்துவின் புகைப்படக் கருவி

முத்து, தீபன் இருவரும் இணைபிரியாத நண்பர்கள்! பாடசாலை நாட்கள் மட்டுமன்றி, மற்ற விடுமுறை நாட்களிலும்கூட அவர்கள் இருவரையும் சேர்த்தேதான் பார்க்கமுடியும்!

தீபன் புகைப்படக் கருவி வைத்திருந்தான். எங்கு சென்றாலும், கூடவே எடுத்துச் செல்வான். தனக்குப் பிடித்த காட்சிகளையெல்லாம் படம் பிடித்துக் கொள்வான்.

முத்துவுக்கும் புகைப்படக்கருவிமேல் ஆசை வந்துவிட்டது. தனக்கும் ஒன்று வேண்டுமென்று தந்தையிடம் கேட்டான்.

'கொஞ்சநாள் போகட்டும் வாங்கித்தருகிறேன். இப்பொழுது நன்றாகப் படி' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ஆனால், அவன் ஆசை தணியவில்லை.



முத்துவின் ஆசையைக் கண்டு, 'முத்து, டுபாயில் இருக்கும் மாமாவுக்கு வேண்டுமானால் ஒரு கடிதம் போடு. விடுமுறையில் வரும்போது, வாங்கிக்கொண்டு வரட்டும். என்னால் இப்பொழுது வாங்கித்தர முடியாது', - என்று தந்தை சொல்லிவிட்டார்.

தந்தை சொன்னதைக் கேட்ட முத்துவும் டுபாயில் இருக்கும் மாமாவுக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டான்.

என்ன ஆச்சரியம்! எண்ணிப் பத்தே நாள்தான். திடுமென வந்து இறங்கிவிட்டார். டுபாய் மாமா. திடீரென விடுமுறை கிடைத்ததாகவும், அதனால் கடிதம்கூடப் போடமுடியவில்லை என்றும் கூறினார். பின்னர், தனது பையைத் திறந்து, மறக்காமல் முத்துவுக்காக வேண்டி வந்த ஒரு சின்ன அழகான புகைப்படக் கருவியை எடுத்துக் கொடுத்தார்.

முத்துவுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. ஒரே குதிதான்! கும்மாளம்தான்! மாமாவைக் கட்டிப்பிடித்தான். முத்தம் கொடுத்தான், விழுந்து விழுந்து உபசரித்தான். புகைப் படக் கருவியை வாங்கி அதற்கு முத்தம் கொடுத்தான், தோளில் மாட்டிப் பார்த்தான். ஏற்கனவே அனுபவம் உள்ளதால் ஒரே நாளில் எல்லாம் கற்றுக்கொண்டான்.

இரண்டு நாட்கள் அவர்களுடன் தங்கிவிட்டு, மாமா தனது ஊருக்குப் போக ஆயத்தமானார். மாமாவை வழியனுப்புவதற்கு பெற்றோர்களோடு முத்துவும் பேருந்து நிலையத்துக் குச் சென்றிருந்தான். அன்று அங்கு நல்ல சனக்கூட்டம்.

திடீரென்று மின்விளக்குகள் எல்லாம் அணைந்துவிட்டன. எங்கும் ஒரே இருள். ஐந்து நிமிடம்கூட ஆகியிருக்காது. கூட்டத்தில் குய்யோ, முறையோ என்று ஒரே கூச்சல்; குழப்பம். யாரோ இருட்டில் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடிவிட்டானாம்.

சிறிது நேரத்தில், விளக்குகள் மீண்டும் எரியத் தொடங்கின. எல்லோரும் ஓடிவந்தனர். விசாரித்தனர். ஆனால், யாராலும் திருடனை அடையாளம் காட்ட முடியவில்லை. சங்கிலியைப் பறிகொடுத்த பாட்டியோ பரிதாபமாக அழுதாள், பத்துப் பவுண் சங்கிலி போச்சதே!' - எனப் பரிதவித்தாள்.

முத்து, தன் தோளில் மாட்டிய புகைப்படக் கருவியோடு அவர்களை நோக்கி ஓடிவந்தான்.

'பாட்டி, நான் அந்தத் திருடனைப் புகைப்படம் பிடிச்சிருக்கேன். கழுவிப் பார்த்தால் தெரியும்' - என்றான்.

அனைவரும் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தார்கள்.

டுபாய் மாமா, 'நீ எப்படி அவனைப் படம் பிடித்தாய்?' என்று கேட்டார்.

'கூட்டத்தில் அவன் பெண்கள் பக்கம் திரிஞ்சதும், முழிச்ச முழியும் எனக்குச் சந்தேகத்தை ஏற்படுத்திச்சு. அப்பவே நான் அவனை யாருக்கும் தெரியாம 'கிளிக்' பண்ணிட்டேன்', என்றான் முத்து.

'இந்தப் பாட்டியின்ர சங்கிலியைத் திருடினது அவன்தான்னு எப்படி நீ உறுதியாகச் சொல்லுறாய்?' - என முத்துவின் அப்பா கேட்டார்.

'விளக்குகள் அணையிறநேரம் அவன் அந்தப் பாட்டிக்குக் கிட்ட நிண்டவன்', - முத்து தொடர்ந்து கூறினான்.

படச்சுருளைக் கழுவிப் பார்த்தால், ஏற்கனவே அவன் ஒரு திருடன் என்னபது தெரியவந்தது. அவனைப் பிடித்து விசாரித்ததில் உண்மையை ஒப்புக்கொண்டு, சங்கிலியையும் கொடுத்துவிட்டான்.

'இப்ப பார்த்தீர்களா? ஒரு புகைப்படக் கருவியை வாங்கிக்கொடுக்க யோசிச்சீங்கள்! பத்துப் பவுண் சங்கிலியையல்லவா இப்ப மீட்டுக் கொடுத்திருக்கிறான்' - அம்மா பூரித்துப்போனாள்.

'ஆமாம். உங்கமகன் முத்து கெட்டிக்காரன் தாம்மா! அவனுக்கு என்னுடைய நன்றிகள்' - என்றாள் பாட்டி.

# உழைப்பே உயர்வு தரும்

ஒரு ஊரில் ஒரு பெரியவர் இருந்தார். அவருக்கு இரண்டு மகன்மாரும், ஒரு மகளும் இருந்தனர். அவர்களில் இரண்டாவது மகன் மிகவும் கெட்டிக்காரன். மூத்த மகன் கல்வியில் ஆர்வம் காட்டவில்லை.

இதனால், இளையமகன் படிப்பதைப் பார்க்கப் பார்க்க மூத்த, மகனுக்குப் பொறாமை வந்தது. ஒருநாள் காலை நேரம் சைக்கிள் ரயரின் காற்றை வெளியேற்றி, சைக்கிளை ஓடாமல் பண்ணினான். என்றாலும் இளைய மகன் அன்று பாடசாலைக்கு நடந்தே சென்றான். படித்து முன்னேறினான். சில வருடங்கள் கழிந்தன. மூவரும் வளர்ந்துவிட்டார்கள்.

பெரியவர் தனது சொத்தை பிள்ளைகளுக்குக் கொடுக்க எண்ணினார். மூவரையும் அழைத்தார். 'எனது சொத்தின் ஒரு பகுதியை உங்கள் மூவருக்கும் தருகின்றேன். நீங்கள் இந்தச் சொத்தை அழிக்காமல், பெருக்க வேண்டும்.

யார் கூடுதலாகப் பெருக்கி வைத்திருக்கின்றீர்களோ, அவர்களுக்கே என் மீதிச் சொத்தைத் தருவேன்' என்றார். அதன் பின்னர் அவர் வெளியூர் சென்றுவிட்டார்.

சில மாதங்களின் பின்னர், அவர் ஊர் திரும்பினார். மூவரையும் கூப்பிட்டு சொத்தைப் பற்றி விசாரித்தார். மூத்தமகனும், மகளும் தந்தை கொடுத்த சொத்தை அப்படியே காட்டினார்கள். ஆனால் இளையமகன் சொத்தை இரு மடங்காகப் பெருக்கிக் காட்டினான்.

அதனைப் பார்த்த தந்தை 'எப்படிச் சொத்தைப் பெருக்கினாய்' என்று கேட்டார். அதற்கு அவன் 'நான் பலசரக்குக் கடை ஒன்றைத் திறந்து வியாபாரம் நடத்தி முன்னேறினேன்' என்றான். இதனைக் கேட்ட தந்தை - மீதிச் சொத்தை இளையமகனுக்குக் கொடுப்பதாக முடிவு செய்தார்.

அப்பொழுது இளையமகன் 'எனக்கு மட்டும் சொத்தைத் தரவேண்டாம். எல்லோருக்கும் பிரித்துத் தாருங்கள் என்றான். அதை அவதானித்த மூத்த மகன், தம்பியின் நல்ல மனதை உணர்ந்து மன்னிப்புக் கேட்டார்.

க. ஆனந்
தரம் - 09
சென். ஜோன்ஸ் கல்லூரி.

# பாழடைந்த கிணற்றின் சுயசரிதை

ஒருநாள் ஒரு சிறுவன் தனது நண்பனின் வீட்டுக்குச் செல்லும்போது, பல சோலைகளைத் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது. அவ்வாறு செல்லும்போது, இடையில் பாழடைந்த கிணறு ஒன்று எதிர்ப்பட்டது.

சிறுவனைக் கண்ட அந்தக் கிணறு 'சிறுவனே நில்! நான் எனது வாழ்க்கையை உன்னிடம் கூறுகின்றேன். கேட்டுவிட்டுச் செல்' - என்றது. அதனைக் கேட்ட சிறுவனும் 'உன் கதையைச் சொல்' - என்றான்.

கிணறும் தனது கதையைச் சொல்லத் தொடங்கியது. ஒரு காலத்தில் இந்தக் கிராமத்தில் நீர் நன்றாக இருக்கவில்லை. அத்தோடு எல்லோருக்கும் நீர் கிடைக்கவில்லை. அதனால், இங்கு வாழ்ந்த ஒரு பணக்காரர் என்னைக் கட்டிவிட்டார்.

எனது நீர் மிகவும் சுவையாக இருந்ததால், மக்கள் என்னிடம் தினமும் வந்து நீர் எடுப்பார்கள். ஒருநாள் பெருமழை பெய்து, வெள்ளம் வழிந்தோடத் தொடங்கியது. அனைவரும் வீட்டுக்குள்ளேயே இருந்தார்கள்.

ஆனால் ஒருவன் மட்டும், இந்த வழியால் நடந்துவந்தான். எனது கட்டில் ஏறி வாய்க்கால் என்று நினைத்து கிணற்றினுள் விழுந்துவிட்டான். ஒருவரும் அவனைத் தேடிவரவில்லை. மழைநின்று வெள்ளம் வடிந்தபின், அவனைத் தேடி வந்தனர்.

கிணற்றினுள் அவனைக் கண்டு வெளியில் எடுத்தார்கள். அவன் இறந்திருந்தான். அன்றிலிருந்து என்னிடம் ஒருவரும் நீர் எடுக்கவரவில்லை. அதன்பிறகு எல்லோரும் என்னைப் 'பேய்க்கிணறு' என்று சொல்லுவார்கள்.

'இப்போது என் கதையை உன்னிடம் சொன்னதால், எனது குறை கொஞ்சம் தீர்ந்துவிட்டது' என்று சொன்னது கிணறு.

பாழடைந்த கிணற்றின் கதையைக் கேட்டபின்னர், சிறுவன் தனது நண்பனின் வீட்டுக்குச் சென்றான்.

க. துவாரகா
தரம் - 06
யாழ். வடமராட்சி
மத்திய மகளிர் கல்லூரி.

# நகைச்சுவை



தாத்தா : அசோகச்சக்கரவர்த்தி ஏன் பாதை ஓரங்களில் மரம் நட்டவர்?

மயூரன்: பிழையாச் சொல்லுறீங்கதாத்தா. அசோகச்சக்கரவர்த்தி செடிதான் நட்டவர்.



சூரியா : 2006 ஆம் ஆண்டில் உலகம் எப்படி இருக்கும்?

குமார் : அப்பவும் உலகம் உருண்டையாகத்தான் இருக்கும்!



பிரபு : நானும் எங்கட அப்பா மாதிரியே, டொக்டர் ஆக வேணும் என்று ஆசைப்பட்டேன்.

ராஜா : உன்ட அப்பா டொக்டரா?

பிரபு : இல்லை... அவரும் டொக்டராக வேணும் என்று ஆசைப்பட்டவர்.



# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்

## விண்ணப்பம்


முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
:..............................

.................... திகதி .................... ஒப்பம்

.................... அதிபர்/ஆசிரியர் ஒப்பம் .................... பெற்றோர் ஒப்பம்


## புலன் என்ன புலன்?


ஐம்புலன்களைப் பற்றி உங்களுக்குத் தெரியும். இதோ பரீட்சை. படத்தை நன்றாகப் பாருங்கள்.



# படக்கதை

இதோ உங்களுக்காக ஒரு சின்னஞ்சிறிய படக்கதை. ஆனால் இவை படக்கதைக்குரிய ஒழுங்கமைப்பில் இல்லை. இலக்கமிட்டு படக்கதையைக் கண்டுபிடியுங்கள்.





1 தொடக்கம் 104 வரையான புள்ளிகளை இணைப்பதன் மூலம், சந்தோசமாக குதித்து விளையாடுபவர் யாரெனக் கண்டுபிடியுங்கள்!



## அறிந்துகொள்ள

1. நவீன ஓவியத்தின் தந்தை யார்?
   பிக்காசோ
2. யாழ்பறவை எங்கு காணப்படுகிறது?
   அவுஸ்ரேலியாவில்
3. மூட்டுவலியில் தொடங்கி இதயம்வரை பாதிக்கும் காச்சல் எது?
   ரூமட்டிக்காய்ச்சல்
4. ஈபிள் கோபுரம் எந்த நாட்டில் உள்ளது?
   பிரான்ஸ்
5. சாய்ந்த கோபுரம் உள்ள நாடு எது?
   இத்தாலி
6. பபிலோனியன் தொங்கு தோட்டம் எங்கே உள்ளது?
   ஈராக்
7. மஞ்சள் ஆறு ஓடும் நாடு எது?
   சீனா
8. தேநீர் விருந்து எந்த நாட்டுக் கலாசாரம்?
   ஜப்பான்
9. உலக நீர் தினம்?
   பங்குனி - 22

வே.ராஜா
யா/ கரவெட்டி
விக்னேஸ்வராக் கல்லூரி.

## மூளைக்கு வேலை

100 மைனாக்கள் அமர்ந்திருந்த ஒரு மரத்தை நோக்கி ஒரு வேடன் தன் துப்பாக்கியால் சுட்டான். மரக்கிளையிலிருந்த மைனாக்களில் 2 மட்டுமே தோட்டாவுக்குப் பலியாகி தரையில் விழுந்தன எனில் மரத்தின் மீதிருந்த மைனாக்கள் எத்தனை?

## தமிழ் ஆண்டின் மாதங்களும் பருவ காலங்களும்

- ❋ மார்கழி, தை - முன்பனிக்காலம்
- ❋ மாசி, பங்குனி - பின்பனிக்காலம்
- ❋ சித்திரை, வைகாசி - இளவேனில், வசந்தகாலம்
- ❋ ஆனி, ஆடி - முதுவேனில்காலம்
- ❋ ஆவணி, புரட்டாதி - கார்காலம்
- ❋ ஐப்பசி, கார்த்திகை - கூதிர்காலம்

வி.கோபிகா
தரம் - 04
யா/திருக்குடும்ப -கன்னியர்மடம் வித்தியாலயம்.

## MY SELF


My name is Manjuki. My father's name is Satgunam. My mother's name is Valarmathy. My father is a Welder. My mother is a House Wife. I have no brothers and sisters. I am a student of Chundikuli Girls College. I am in Grade 6c. My favourite subject is English. I have a pet dog. I love all.

S.Manjuki
Grade 6c
Chundikuli Girls College.

## மூளைக்கு வேலை சென்றவார விடைகள்

ரூபா 15, ரூபா 1, ரூபா 3, ரூபா 5

## இரண்டு படங்களுக்கும் இடையே 15 வித்தியாசங்கள் உள்ளன. எங்கே கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!



நமது ஈழநாடு

வைர வரிகள்

முடியாது என்று சொல்லப்பட்டதை
முடித்துக் காட்டுவது வாழ்க்கையின்
தலையாய மகிழ்ச்சி அல்லவா?
- வால்ட்டர் பேகாட்.

## நமது நோக்கு

### இணுவில் சம்பவம் உணர்த்தும் செய்தி

நேற்றுமுன்தினம் நண்பகல் யாழ்ப்பாணம் இணுவில் சந்தியில் அமைந்துள்ள சிகை அலங்கரிப்பு நிலையமொன்றில் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் படைத் தரப்பைச் சேர்ந்த ஒருவரின் மிலேச்சத்தனமான துப்பாக்கிச் சூட்டின் காரணமாக உயிரிழந்த அவலச் சம்பவம் நிகழ்ந்துள்ளதுடன் - அவருடன் பணியில் நின்றிருந்த மற்றொரு இளைஞரும் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த இரு அப்பாவி இளைஞர்கள் மீதான துப்பாக்கிச் சூட்டுக்கு வழக்கம் போல தவறுதலாக நிகழ்ந்த சம்பவம் என்று கூறி, அதற்கு முற்றுப்புள்ளி வைத்து நியாயப்படுத்த அரசும் - படைத்தரப்பும்முயன்றுள்ளமைதான் எரிச்சலூட்டும் விடயமாகும்.

இந்தச் சம்பவத்துக்கு எல்லாவகையிலும் முற்றுமுழுதான காரணம் - படைத்தரப்பைச் சேர்ந்தவர்களின் மனித நேயத்தை நிராகரிக்கும் செயற்பாடுதான் என்பது, இதே போன்று ஏற்கனவே நடைபெற்ற பல சம்பவங்களுடன் இணைத்துப் பார்க்கும் போது உறுதியாகின்றது.

உண்மையில், இணுவில் சம்பவமானது எல்லாவகையிலும் தவிர்க்கப்பட்டிருக்கக் கூடிய ஒன்றேயாகும்.

படைத்தரப்பினர் தமது சிகையலங்கரிப்பு நடவடிக்கைகளை- தேவைகளை மேற்கொள்வதற்கு இராணுவ முகாம்களுக்குள்ளேயே சகல வசதிகளும் செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் அங்குதான் தமக்குரிய அத்தகைய தேவைகளை நிறைவேற்றிக்கெள்ளவேண்டும் என்ற விதிமுறையும் இருப்பதாக கூறப்படுகிறது.

அது அப்படியானால், பொதுமக்கள் சாதாரணமாகச் செல்லும் ஒரு சிகை அலங்கரிப்பு நிலையத்தில் சென்று -அதுவும் தனது பாதுகாப்புக்குரிய படையினருடன் சென்று- முடி திருத்தம் செய்யவேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது? அதே சமயம் வெளியே பாதுகாப்புக்காக நின்ற சிப்பாயின் துப்பாக்கியில் இருந்து புறப்பட்ட ரவைகள் உள்ளே இருந்த தங்கள் அதிகாரியில்படாமல் மிக நுணுக்கமாக அங்கிருந்த அப்பாவிப் பணியாளர்கள் மீது துல்லியமாகப்படக் காரணம் தான் என்ன?

சிகையலங்காரக் கடையின் உட்புறத்தை நோக்கி குறிவைத்தபடியா அவர்கள் பாதுகாப்புப் பணியில் நின்றிருந்தார்கள்?

இயல்பாக எந்த இலக்கையும் குறிவைக்காமல் துப்பாக்கியை வைத்திருக்கும் ஒரு சிப்பாயின் விரல்கள் தவறுதலாக துப்பாக்கியின் விசையினை அழுத்தினால் வெடிக்கும் அளவிற்கு அவர் தயார் நிலையிலா அதனைத் தாங்கியிருந்தார். அதுவும் பொதுமக்கள் பெருமளவில் நடமாடும் ஒரு இடத்தில்..!?

அப்படித்தான் அவர் வைத்திருக்கும் நிலையில் அது தவறுதலாக வெடித்தாலும் ரவைகள் குறிப்பிட்ட இலக்கை நோக்கிப் பாய வாய்ப்பேயில்லை ...

எப்படியோ இது குறித்து வினாக்கள் எழுவது தவிர்க்க முடியாததே. ஆனாலும், அதற்குச் சரியான விளக்கமோ, விடையோ கிடைக்கப்போவதில்லை என்பது நிச்சயம். ஆனால், இந்தச் சம்பவம் மீண்டும் செய்தியை அரசுக்கும் படைத்தரப்பினருக்கும் மட்டுமல்ல, சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேச சமூகத்துக்கும் உறுதியாக உரைத்துள்ளது என்பது உண்மையே!

மக்கள் தங்கள் வாழ்விடங்களை ஆக்கிரமித்து, தங்களை அச்சுறுத்தி அடக்க நினைக்கும் படைத்தரப்பினரின் ஆயுத முனையிலான அராஜகங்களை சகித்துக் கொண்டு பொறுமை காக்கத் தயாராக இல்லை என்பதே அதுவாகும்.

இணுவில் பகுதியில் கொதித்தெழுந்த மக்களின் உணர்வுக்கு அர்த்தம் நிறையவே உண்டு.

அவர்களின் எதிர்ப்புணர்வு இயல்பானது; நியாயமானது; ஜனநாயகத் தன்மை கொண்டது. மனித உயிர்களின் இழப்பென்பது - அதுவும் அப்பாவி மக்களின் உயிரை அற்பத்தனமாக நினைப்பதென்பது ஏற்றுக்கொண்டு அமைதிகாத்து விதியின் மேல் பழிபோட்டு ஓய்வடையும் விடயமல்ல.

அந்த மக்களின் கொந்தழிப்பு நிலையைத் தணிக்க கையாளவேண்டிய வழிமுறைப் பிசகினாலேயே பொலிஸ் சிரேஷ்ட அத்தியட்சகரின் கொலையும் நிகழ்ந்துள்ளது எனலாம்.

இந்த மாதிரி அசம்பாவித நிகழ்வுகள் நடக்கும் சூழலில், கண்ணீர்ப் புகைப் பிரயோகம் - குண்டாந்தடிப் பிரயோகம் போன்றவற்றை மக்கள் மீது செய்வதென்பது புத்தி பூர்வமான நடவடிக்கையேயல்ல... நிலைமையை மேலும் மோசமான அனர்த்தத்துக்குள்ளாக்கும் அதிகார பூர்வ செயற்பாடாகவே அது இருக்கும்.

இணுவில் சம்பவமும், அது தொடர்பான ஏனைய தொடர் நிகழ்வுகளும், மீண்டும் ஊரடங்கு வாழ்வை மக்கள் மீது திணிக்க படைத்தரப்பினர் முற்படுவதும் - சமாதானம் தொடர்பான அற்ப சொற்ப நம்பிக்கையையும் அடியோடு அழிக்கும் செயல்களேயாகும்.

மக்களின் வாழ்விடங்களை இராணுவம் ஆக்கிரமித்து அதிகார மேலாதிக்கம் செய்யும்வரை இத்தகைய அவலங்கள் தொடரவே செய்யும்.

இந்த நிலையை மாற்றாது அல்லது இந்த நிலைமை மாறாது - சமாதானம் என்பது சாத்தியமற்ற தொன்றாகவே இருக்கும் என்ற உண்மையினை அதனை வலியுறுத்தும் அனைத்துத் தரப்பும் புரிந்து கொள்ளவேண்டும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eelanaadu.com

## நாடும் நடப்பும்




# ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை தோற்கடிக்க சுதந்திரக்கட்சி முழு மூச்சுடன் செயற்படும்!

**அமைச்சர் மைத்திரிபால சிறிசேன**

கொழும்பு

எதிர்க்கட்சி தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்கவை, தேர்தலில் தோற்கடிப்பதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, அங்கு தொடர்ந்து கூறுகையில் -

சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை உத்தியோக பூர்வமாக அறிவித்த தினத்தன்றே, அனைவரும் எம்முடன் இணைந்து செயற்பட ஒன்றிணையுமாறு அழைப்பு விடுத்திருந்தோம். அதனடிப்படையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவரைத் தோற்கடித்து, பிரதமர் ராஜபக்ஷவை ஜனாதிபதி பதவியில் அமர்த்துவதை எதிர்பார்த்து செயற்பட்டு வருகிறோம்.



இதேவேளை, சுதந்திரக் கட்சியின் 54 ஆவது ஆண்டு விழா -ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி, கொழும்பு நகரசபை திடலில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

# புதிய இடதுசாரி முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக லீனஸ்!

கொழும்பு

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் புதிய இடதுசாரி முன்னணி தனித்துப் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளது.

தங்கள் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக லீனஸ் ஜயதிலக்க நியமிக்கப்பட்டுள்ளதாகப் புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கரு ணாரட்ண தெரிவித்தார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரினது கொள்கைகள் ஒன்றே. கொள்கைகள் தொடர்பாகக் கதைத்துப் பயனில்லை என்பதால், இப்போது இருவரும் ஒருவருக்கொருவர் சேறுபூசும் நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர் - இவ்விருவரினது கொள்கைகளும் அமெரிக்கத் தலைநகர் நியூயோர்க்கிலேயே தயாரிக்கப்படுகின்றன. அதனால் புதிய இடதுசாரி முன்னணி தனித்துப் போட்டியிடும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நீதிமன்றத்தில் சமுகமளிக்கத் தவறியதாக மேர்வின் சில்வாவை கைது செய்ய உத்தரவு!

கொழும்பு

தொழில்துறைப் பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவை உடனடியாகக் கைதுசெய்து, நீதி மன்றத்தில் ஆஜர் படுத்துமாறு கொழும்பு பிரதம நீதி மன்றம் பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது.



கொழும்பு பிரதம நீதிமன்ற மேலதிக நீதிபதி ஹிகான் பலப்பிட்டிய இந்தப் பிடிவிறாந்தைப் பிறப்பித்தார்.

ரூபா 10 லட்சத்தை நபரொருவருக்கு வழங்கி, அந்தப் பணத்தை மீளச் செலுத்தாமல் மோசடி செய்துள்ளார் எனத் தெரிவித்து, மேர்வின்சில்வா ஊழல் மோசடி விசாரணைப் பிரிவில் முறைப்பாடொன்றைச் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்தபோது, நீதிமன்றத்துக்கு அவர் ஆஜராகத் தவறிவருவதையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

10.04.2003 இல் ரூபா 10 லட்சத்தை மேர்வின் சில்வாவிடமிருந்து பெற்றுக்கொண்டு, மீளச் செலுத்தாமல் ஊழல் செய்தமை தொடர்பாக மற்றுமொருவருக்கு எதிராக மோசடி விசாரணைப் பிரிவு இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தது.

வழக்கின் சாட்சிகளான மேர்வின் சில்வா உட்பட, இருவர் நீதிமன்றத்தில் சமுகமளிக்கத் தவறிவருகின்றனர். இதனையடுத்துப் பிறப்பிக்கப்பட்ட இந்தப் பிடிவிறாந்தை அமுல்படுத்துமாறு ஊழல் மற்றும் மோசடி தவிர்ப்பு பொலிஸ் பிரிவுக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# மடு திருவிழாவில் பங்கேற்க பிரதமர் ராஜபக்ஷ விருப்பம்!

மன்னார்



மன்னார் - மடு தேவாலய திருவிழாவின் இறுதிநாள் நிகழ்வுகளில் ஒரு விசேட விருந்தினராகக் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ - விடுதலைப்புலிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மடு தேவாலயம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருப்பதனால்தான், இந்தக் கோரிக்கையை அவர் புலிகளிடம் முன்வைத்திருக்கிறார். மடுத் தேவாலய திருவிழாவின் இறுதிநாள் நிகழ்வுகள்- எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறும்போது - நாடு முழுவதிலுமிருந்து 10 லட்சத்துக்கும் அதிகமான கத்தோலிக்க மதத்தவர்கள் அதில் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

விமானப் போக்குவரத்து அமைச்சின் கீழ் செயற்படும் அமைப்பு ஒன்றின் முக்கிய அதிகாரியொருவர் மூலமாகவே பிரதமரின் இந்தக் கோரிக்கை- விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான விடுதலைப் புலிகளின் முடிவு இவ்வார இறுதியில் தெரிவிக்கப்படுமெனத் தெரிகிறது.

## அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பானகூட்டம்

மட்டுவில் —

நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளுடன் தவறாது கலந்துகொள்ளுமப்படி அரச அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## குறும்பட விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

திருநெல்வேலி —

யாழ்.பல்கலைக்கழக திரைப்பட வட்டமும் லண்டன் விம்பம் அமைப்பும் இணைந்து நடத்தும் குறும்பட விழா கைலாசபதி கலையரங்கில் நாளை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஈழத்தவர்களாலும், புலம்பெயர்ந்த ஈழத்தவர்களாலும் தயாரிக்கப்பட்ட பதினான்கு குறும்படங்கள் இந்த விழாவில் இலவசமாகக் காண்பிக்கப்படும்.

2004 ஆம் ஆண்டில் விம்பம் அமைப்பு நடத்திய குறும்பட போட்டியில் தெரிவு செய்யப்பட்ட ஈழத்துக் குறும்படக் கலைஞருக்கான பரிசுகளும் இந்த விழாவில் வழங்கப்படும்.

ஆர்வலர்கள் அனைவரும் வருகை தந்து பயன்பெற முடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## நோயாளர் பெரும் சிரமம்

நெல்லியடி —

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிட வருவோரும், வெளிநோயாளர்களாக வைத்தியம் பெற வருவோரும் தங்கி இருப்பதற்கான கட்டடங்களோ, ஆசனங்களோ போதியளவு இல்லாத காரணங்களால் நிழலின் கீழ்ப் பலர் தங்கி இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

அண்மையில் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் பாவனைக்குதவாது ஒதுக்கிவைக்கப்பட்ட பல ஆசனங்களை திருத்தம் செய்து, வைத்தியசாலையில் போடப்பட்டிருந்தாலும் அவை போதுமானதாக இருக்கவில்லை.

பார்வையிட வருவோர் குறித்த நேரத்துக்கு முன் வைத்தியசாலைக்குள் செல்ல முடியாதென்பதால் அவர்கள் தங்குவதற்கான ஒரு தற்காலிக கொட்டகையாவது அமைத்துத் தந்தால் பேருதவியாகவிருக்கு மெனக் கூறுகின்றனர்.

வைத்தியசாலையை தரமுயர்த்தி புதிய கட்டடம், ஆளணி, தளபாடம் போன்றவற்றை நிறைவு செய்வதற்காக எடுக்கப்படும் முயற்சிகள் பலனளிக்கும் வரை இந்தக் குறைபாடுகளை கண்டறிந்து பொது மக்களும் தம்மாலான பங்களிப்பைச் செய்ய முன் வருவது நல்லது என வைத்தியசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளர் வி.ஜி. தங்கவேல் தெரிவித்தார். (13)

## நிலுவைகளுடன் ஓய்வூதியம்

மட்டுவில் —

ஓய்வூதியத் திணைக்களத்தின் 6/2004 இலக்க சுற்றுநிருபத்தின் படி, விதவை, விதுரரர் வலுவிழந்தோர், அநாதை ஓய்வூதியம் பெறுநர்களின் 250 கோவைகள் தென்மராட்சி பிரதேச செயலகத்தால் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

இவர்களது மீளாய்வு செய்யப்பட்ட அதிகரித்த ஓய்வூதியம் ஓகஸ்ட் மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து நிலுவைகளுடன் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலக ஓய்வூதியப் பகுதியினர் தெரிவித்தனர். (24)

# கரவெட்டி பிரதேச செயலகப்பிரிவில் 70 வீடுகள் அமைப்பதற்கு அனுமதி

கரவெட்டி —

வடக்கு - கிழக்கு மகாண புனர்வாழ்வு புனரமைப்பின் வீடமைப்புத்திட்டமிடல் பகுதியினரால் கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவுக்கு 70 வீடுகள் அமைப்பதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி வீடுகள் அமைப்பதற்கான கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டபின், அந்தக்கிராமங்களின் பயனாளிகள் உரிய முறைப்படி தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கான முதலாம் கட்ட வேலைகள் தொடர்வதற்கான நிதியும் வழங்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட கிராமங்கள் ஆட்டுப்பட்டி, கதிரோலை, பைங்கூரன், மாவடி, வேலியன் தோட்டம் ஆகியனவாகும். மேற்படி கிராமங்களிலிருந்தே 70 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முதலாம் கட்டமாக இவர்களுக்கு ரூபா 50 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. இந்தப்பணத்தைக் கொண்டு முதலாம் கட்டத்தில் செய்யப்படவேண்டிய வேலைகளை முழுமையாக முடித்தவர்களுக்கு 2 ஆம் கட்ட நிதி வழங்குவதற்கான நடவடிக்கைகளைப் பிரதேச செயலகம் செய்து வருகிறது.

இந்த வீட்டுத்திட்டத்தின்படி முழுமையாகச் சேதமடைந்த வீடுகளுக்கு 25ஆயிரம் ரூபாவும், பகுதியாகச் சேதம டைந்த வீடுகளுக்கு 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடக்கூடிய அம்சமாகும். (13)

## லிப்ற் திட்டம் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம் —

கெயர் சர்வதேச நிறுவனத்தின் "லிப்ற்" திட்ட அறிமுக நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கல்வயல் புலுட்டையன் பிள்ளையார் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது. இந்தத்திட்டத்தில் கல்வயல் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 18 வயதுக்கு மேற்பட்ட இருபாலாரையும் கலந்து பயன்பெறுமாறு கல்வயல் கிராம அலுவலர் கேட்டுள்ளார். (24)

## தொழில்நுட்ப அலுவலர்களுக்கு மோட்டார்சைக்கிள்கள் வழங்கப்பட்டது

மட்டுவில் —

வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டத்தின் கீழ் மீள் நிர்மாணத்தைச் செயற்படுத்தும் மற்றும் கண்காணிக்கும் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு நீர்ப் நிறுவனத்தால் மோட்டார் சைக்கிள்க்ள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த மோட்டார் சைக்கிளுக்கான எரிபொருள், அதனைப் பயன்படுத்தும் தொழில் நுட்ப அலுவலரது வேலைப் பளுவையும், தூரத்தையும் கருத்திற்கொண்டு திட்டப் பணிப்பாளரினால் வழங்கப்படும்.

அத்துடன் மேற்பார்வைப் பணிக்காக தொழில்நுட்ப அலுவலர் ஒருவருக்கு ரூபா 500 என்ற அடிப்படையில் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டதும், வாடகைக்கு வழங்கப்படும் எனவும், இவர்களுக்கு ஏனைய பிரயாணக் கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படமாட்டாது எனவும் திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன் சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவித்துள்ளார். (24)

## கோட்டமட்ட ஆங்கில எழுத்துப் பரீட்சை

வடமராட்சி —

வடமராட்சி வலயத்திற்குட்பட்ட கோட்ட மட்டத் திலான ஆங்கில எழுத்துப் பரீட்சை போட்டிகள் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதில் பருத்தித்துறைக் கோட்டம் வட.இந்து மகளிர் கல்லூரியிலும், கரவெட்டிக் கோட்டம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், மருதங்கேணிக் கோட்டம் மருதங்கேணி இந்து தமிழ் வித்தியாலயத்திலும்,' மருதங்கேணி இராணுவ பிரிவுக்குள் அடங்கியுள்ள பாடசாலைக்கு குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் நடைபெறவுள்ளது.

போட்டிகள் யாவும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதால் பங்கு கொள்ளும் மாணவர்களை காலை 8.45மணிக்கு முன்னர் அந்தந்த இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா தெரிவித்தார். (12)

## தொலைக்கல்விப் பாடநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம் —

இலங்கை அபிவிருத்தி நிறுவனத்தால் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான தொலைக்கல்வி பாடநெறியின் மூன்றாம் கட்டத்துக்கு விண்ணப்பித்தவர்கள் ஆராய்ச்சி முறைமை தொடர்பான அறிமுக நிகழ்வுக்கு மேற்படி நிறுவனத்தால் அழைக்கப்படவுள்ளனர்.

இந்த அறிமுக நிகழ்வு மழலசேரக மாவத்தை, கொழும்பு - 07 என்னும் முகவரியில் அமைந்துள்ள மேற்படி நிறுவனத்தில் இடம் பெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வுக்கு விண்ணப்பித்தவர்கள் குழுவினராக அழைக்கப்படவுள்ளனர். இந்த வகையிலுள்ள மொத்தம் பத்து குழுவினரில் முதல் குழுவினர் இந்தமாத இறுதியில் அழைக்கப்படவுள்ளனர்.

## பனை - தென்னைவள கற்கைநெறி; தொடருமா என சந்தேகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

கடந்த 2004 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பனை, தென்னைவள கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டு ஒருவருடம் பூர்த்தியாகி, இறு திப்பரீட்சையும் முடிவுற்று ஏழு மாதங்களாகிவிட்டன.

இதன் பெறுபேறுகளை வெளியிட்டு, அந்த மாணவர்களுக்கான வேலை வாய்ப்பு வழங்குவதாகவும் உறுதியளித் திருந்தபடியால் மாணவர்கள் ஆவலுடன் இந்தக் கற்கை நெறியை மேற்கொண்டிருந்தனர்.

ஆனால் இந்தக் கற்கை நெறிக்கு இப்போது என்ன நடந்தது என்று தெரியாமல் மாணவர்கள் அங்க லாய்த்த நிலையில் உள்ளனர். சம்பந்தப்பட்ட உயர் அதிகாரி கள் இது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொண்டு ஆவண செய் வார்களா என சம்பந்தப்பட்ட மாணவர்கள் தமது கவலையை வெளியிட்டனர்.



சுமார் 3.5 லட்சம் ரூபா செலவில் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்காக சிறுவர் பூங்கா ஒன்றினை அமைதது்க் கொடுத்த தொழிலதிபர் திரு.மகிழ்னன் நடராஜா. திருமதி மா.மகிழ்னன் ஆகியோர் அண்மையில் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொள்வதற்காக அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம். (31)

## தொலைபேசி இணைப்பு வழங்கப்படவுள்ளது

நெல்லியடி —

கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பலர் தாம் நீண்டகாலத்துக்கு முன்பே உரிய முறைப்படி தொலைபேசி இணைப்புக்கு விண்ணப்பித்தும் காத்திருக்க வேண்டிய நிலை இருப்பதாகத் தெரிவித்ததையடுத்து, கரவெட்டிப் பிரதேச செயலகம் ரெலிக்கொம் நிறுவனத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தியதன் காரணமாக வெகுவிரைவில் விண்ணப்பித்த அனைவருக்கும் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேற்படி விண்ணப்பதாரிகள் உடனடியாகத் தத்தம் கிராம சேவை அலுவலருடன் தொடர்பு கொண்டு விபரங்களைக் கொடுத்து தவுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (13)

## பலப்படுத்தப்படும் படைமுகாம்

பண்டத்தரிப்பு —

பண்டத்தரிப்பு சந்திப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமை படையினர் பலப்படுத்தி வரு கின்றனர். இதனால் அந்தப் பகுதியில் உள்ள வியாபார நிலையங்களுக்கு செல்வோர் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இராணுவத்தினரால் முகாமை பலப்படுத்த பயன்படுத்தப்படும் முட்கம்பி வளையங்கள் வியாபார நிலைய வாசல் பகுதி வரை அமைந்துள்ளதால் அந்த இடத்தில் வாகனங்களை நிறுத்துவதற்கு பல சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.




இருமொழி அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் யாழ்.செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் நேற்று நடைபெற்றபோது கலந்துகொண்ட சிறப்பு விருந்தினர்களை படத்தில் காணலாம்.

## பண்ணை — மார்பு சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது

யாழ்ப்பணம் —

யாழ்.பண்ணைப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையம், எதிர் வரும் 30ஆம் திகதி உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் பணிமனை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் காச நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், பண்ணை சிகிச்சை நிலையத்தில் உலக வங்கியின் நிதி உதவியுடன் தனியான "விடுதி" ஒன்றை அமைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள மயிலிட்டி சிகிச்சை நிலையம் கடந்த 15 வருட காலமாக மூடப்பட்ட நிலையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## முறைசாராக் கல்விப் பிரிவின் சர்வதேச எழுத்தறிவு தினவிழா

யாழ்ப்பாணம் —

முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்படும் சர்வதேச எழுத்தறிவு தின விழா எதிர் வரும் 9ஆம்,10ஆம் திகதிகளில் யாழ்.மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து சன சமூக நிலையங்களிலும் சர்வதேச எழுத்தறிவு தின விழாவை நடத்தி, அதன் அறிக்கையை வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை சர்வதேச எழுத்தறிவு தின விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரை, கவிதை, விவாதப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற போட்டியாளர்களுக்கு பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மேற்படி இரண்டு தினங்களும் கட்டாயக் கல்வி வயதிலுள்ள பிள்ளைகளுக்குக் கல்விக்கான சந்தர்ப்பத்தை வழங்குவோம் என்ற வாசகத்தை சனசமூக நிலையங்களில் பதாகை ஒன்றில் பொறித்து மக்களின் பார்வைக்ககாக வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

# வேலை வாய்ப்புகளையும், மக்களையும் இணைக்கும் திட்டங்களே இன்றைய தேவை!

## க.வே.பாலகுமாரன் தெரிவிப்பு



கிளிநொச்சி—

"வயது குறைந்தவர்கள் போருக்கு அழைக்கப்படுகின்றார்கள் என்று குறை கூறும் உலகம்- வயது குறைந்தவர்களின் அபிவிருத்தியின் பக்கமும் திரும்பிப் பார்க்க வேண்டும்'' இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி அறிவியல் நகரிலுள்ள தொழில் கல்வி அபிவிருத்தி நிலையத்தின் கண்காட்சி ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

எமது பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களின் இடைவிலகும் விழுக்காடு அதிகரித்துச் செல்கிறது. ஆண்டு ஐந்திலேயே அதிக மாணவர்கள் இடைவிலகுகிறார்கள் என்று குறிப்பிட்ட க.வே.பாலகுமாரன்- கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களில் 2 விழுக்காடான வர்களே உயர் கல்வியைத் தொடர்கின்றனர். எனவே, இந்த மாணவர்களின் நிலை குறித்து சிந்திக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உரியது.

வன்னிப் பிரதேசத்தில் அதிகளவான வேலை வாய்ப்புகள் இருக்கின்ற நிலையிலும் ,மக்கள் வேலை வாய்ப்பற்றவர்களாகவே இருக்கிறார்கள். எனவே வேலைவாய்ப்பையும், மக்களையும் இணைக்கும் வேலைத்திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## முதலுதவி நூல் வெளியீட்டு விழா

கிளிநொச்சி—

வேலுப்பிள்ளை ஸ்ரீதரன் எழுதிய 'முதலுதவி' நூல் வெளியீட்டு விழா - எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமையன்று பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட மலேரியா தடை இயக்கமும், வன்னி மாவட்ட சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிச் சங்கமும் இணைந்து வெளியிடும் இந்த நூல் வெளியீட்டு விழா வைத்தியக் கலாநிதி கா.சுகந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வாகப் பொதுச் சுடரை கிளிசொச்சி மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சோ.ரவிச்சந்திரனும், நூல் வெளியீட்டை வைத்திய கலாநிதி எழுமதி கரிகாலனும், மதிப்பீட்டுரையை ஆசிரிய ஆலோசகர் கணேசலிங்கமும், வைத்திய கலாநிதி யூமாமேஸ¬ம் வழங்கவுள்ளனர்.

## அடிப்படை வசதிகள் எதுவுமின்றி கரும்புள்ளியான் பிரதேச மக்கள் அவதி

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு மாவட்ட கரும்புள்ளியான் பிரதேச மக்கள் தமக்கான அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் உள்ள இந்தக் கிராமத்தில்- 150 இற்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் - குடிநீர் வசதியின்மை, சீரான முன்பள்ளியின்மை, போக்குவரத்து வசதியின்மை போன்ற அடிப்படை வசதிகள் இன்றிக் காணப்படுவதுடன், இந்தக் கிராமத்துக்கான பிரதான வீதி கடந்த 25 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத நிலையிலும் காணப்படுகிறது.

இந்த மக்களின் அடிப்படை வசதியின்மைகள் குறித்து அதிகாரிகள் எவரும் கவனத்தில் கொள்வதில்லை என அந்த மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## மன்னார் மாவட்ட பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை!

மன்னார்—

மன்னார் மாவட்ட பாடசாலைகளுக்கென அண்மையில் 12 ஆங்கில ஆசிரியர்கள் நியமனம் பெற்றுள்ள போதிலும், பின் தங்கிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் தொடர்ந்தும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் மாவட்டத்தில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றிய 79 பேரில் 12 பேருக்கு மட்டுமே நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த மாவட்டத்தில் தொடர்ந்தும் ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவி வருவதால், ஆங்கிலப் பாடத்தில் மாணவர்களின் பெறுபேறு வீழ்ச்சியடைந்து வருவதாக கல்விச் சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஓகஸ்ட் - 06

1837: முதன் முதலாக லண்டனில் ஹைற்பார்க்கில் செற்பன்டைன் என்னுமிடத்தில் நீச்சல் போட்டி நடைபெற்றது.

1841: தந்தி மூலம் முதன் முதலாக செய்தி அனுப்பப்பட்டது. பிரிட்டனில் இராணி விக்டோரியாவுக்கு அல்பிரட் பிறந்த செய்தி தந்தி மூலம் "த ரைம்ஸ்" என்ற பத்திரிகைக்கு அனுப்பப்பட்டது.

1879: விண்வெளிக் காந்தப்புலம் பற்றிக் கண்டுபிடித்த ஜேர்மனியைச் சேர்ந்த விஞ்ஞானி "ஜோஹன் வோன் லாமோண்ட்" காலமானார்.

1890: முதன்முதலாக மின்சார நாற்காலி மூலம் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. நியூயோர்க்கில் கொலைக் குற்றம் சாட்டப் பட்ட வில்லியம் கெம்ளர் என்பவருவருக்கே இவ்வாறு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

1914: ஐரோப்பாவில் மூண்டுவிட்ட போரினால் அங்கு தவிக்கும் அமெரிக்கர்களுக்கு உதவ 50,00,000 டொலர் பெறுமானமுள்ள தங்கத்தை ஏற்றிக்கொண்டு டென்சி என்ற கப்பல் அமெரிக்காவில் இருந்து புறப்பட்டது.

☆ ஆஸ்திரியா ரஷ்யா மீதும், செர்வியா ஜேர்மனி மீதும் போர் தொடுத்தன.

1924: பிரிட்டனுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

1926: முதன்முதலாகப் பெண் ஒருவர் ஆங்கிலக்கால்வாயை நீந்திக் கடந்தார். அமெரிக்காவைச் சேர்ந்த ஜெர்ட்ரூட் எடர்லி என்பவரே 14 மணி 30 நிமிடங்களில் நீந்திக் கடந்து சாதனை நிகழ்த்தினார்.

1932: சர்வதேச திரைப்பட விழா தொடங்கப்பட்டது. வெனிஸ் நகரில் நடைபெற்ற சர்வதேச ஓவியக் கண்காட்சியை யெட்டி நடைபெற்ற இந்தத் திரைப்பட விழாவில் - அமெரிக்கா, இத்தாலி, பிரான்ஸ், பிரிட்டன், ரஷ்யா ஆகிய நாடுகள் கலந்து கொண்டன.

1945: இரண்டாம் உலக யுத்தத்தின் போது, அமெரிக்க விமானப் படையைச் சேர்ந்த "எனோலா கே" என்னும் போயிங் பி-29 என்ற குண்டு வீச்சு விமானம் மூலம், ஜப்பானின் ஹிரோஷிமா நகர் மீது முதலாவது அணுகுண்டு வீசப்பட்டது. ஹிரோஷிமா நகரின் 60 சதவீதப்பகுதி தரைமட்டமாகின. 90,000 இற்கும் அதிகமான மக்கள் இறந்து போயினர். நகர் எங்கும் தீப்புயல் வீசியது.

1948: இந்தியாவின் பிரபல எழுத்தாளர் புதுமைப்பித்தன் காலமானார்.

1962: 307 வருட கால பிரிட்டிஸ் ஆட்சியில் இருந்து ஜமைக்கா சுதந்திரம் அடைந்தது.

1980: உகண்டாவிலுள்ள ஆசிரியர்களை வெளியேற்ற இடிஅமீன் நடவடிக்கைகளை எடுத்தான்.

1984: வல்வெட்டித்துறை தீவிர கண்காணிப்புப் பிரதேசமாக அரச படைகளால் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

☆ உலக சாதனை வீரர் ஆழிக்குமரன் ஆனந்தன் ஆங்கிலக் கால்வாயில் சாதனை முயற்சியில் ஈடுபட்டிருந்த போது மரணமானார்.

☆ உலக சமாதான தினம்.

தொகுப்பு - சந்துரு




முல்லைத்தீவு நகரில் புதிய நகரம் அமைப்பதற்கு அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள தோட்டத்தின் முகப்புத் தோற்றத்தைப் படத்தில் காணலாம்

## தொழிற்பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் - உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம்—

தொழில்பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும், உபகரணங்களும் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி அறிவியல் நகரில் நடைபெற்றது.

முற்பகல் 10 மணியளவில் கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் சீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் -

பொதுச்சுடரை விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் ஏற்றி வைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து தையல் கண்காட்சி மண்டபத்தை சூழல் நல்லாட்சி ஆணையக பணிப்பாளர் ரஞ்சன் திறந்து வைத்தார்.

உணவு பதனிடுதல் மண்டபத்தை விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் திறந்து வைத்தார்.

உபகரணத் தொகுதி கண்காட்சி மண்டபத்தை அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிப்பாளர் தியாகர்ராஜா திறந்து வைத்தார்.

தொடர்ந்து உரைகளை மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன், தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், ரெக் நிறுவனப் பணிப்பாளர் தாஸ், ஐ.எல்.ஓ நிறுவனத்தைச் சேர்ந்த ஜோசப் ஆகியோர் நிகழ்த்தினர்.

அடுத்து பயனாளிகளுக்கான சான்றிதழ்களையும் தையல் உபகரணங்களையும் உணவு பதனிடுதலுக்கான உபகரணத் தொகுதிகளையும் மூத்த உறுப் பினர் க.வே.பாலகுமாரன், சோ.தங்கன், செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனி, தளபதி பாஸ்கரன், தமிழர் புனர்வாழ் வுக்கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் றீகன் உட்பட பலர் வழங்கினர்.

### மன்னாரில்

## கல்வி விழிப்புணர்வு வார செயற்பாடு செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ளது

மன்னார்—

எதிர்வரும் செப்ரெம்பர் கல்வி விழிப்புணர்வு வாரச் செயற்பாடொன்று-மன்னார் மாவட்டம் தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்படவுள்ளது

நேற்று முன்தினம் மடு வலயக் கல்விப் பணிமனையில் இடம் பெற்ற கல்வி மேம்பாட்டுப் பேரவையின் கூட்டத்தின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவர் ஜேக்கப் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் - மடு வலயக் கல்விப் பணிப்பாளர் தெய்வேந்திரன், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் அபேர்சவில், மன்னார் மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் ஒளிவ்ளவன் உட்பட கல்வியியலாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக மன்னார் மாவட்டத்தின் மாணவர்களின் கல்வி நிலையை உயர்த்துதல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## ஐ.தே.க - ஜே.வி.பி கட்சிகள்

# அத்தியட்சகர் படுகொலைக்கு சந்திரிகா மீது குற்றச்சாட்டு!

கொழும்பு —

பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தன கொல்லப்பட்ட சம்பவத்துக்கு ஐ.தே.க மற்றும் ஜே.வி.பி கட்சிகள் ஜனாதிபதி சந்திரிகா மீது குற்றம்சாட்டியுள்ளன.

ஜனாதிபதி போர்நிறுத்த உடன்பாட்டை உரியமுறையில் கொண்டு செல்ல முடியாமையின் ஒரு அங்கமே இந்தச் சம்பவம் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. பொலிஸார் கைகளைக் கட்டுமளவுக்கு நிலைமை மோசமாகியுள்ளது. எனவே, ஜனாதிபதி இதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் தமது கணவரை மீட்பதில் உயர் அதிகாரிகள் உரிய கவனம் செலுத்தவில்லை என உயிரிழந்த யாழ்ப்பாண பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தனவின் மனைவி தெரிவித்தார். தமது கணவர் கடத்தப்பட்டபோது அவரை மீட்பதற்கு அதிகாரிகள் எவரும் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

## மக்களை நெருக்கடிக்குள்...

நிகழ்ந்த சம்பவம் தொடர்பாக யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி விளக்கமளித்தார்.

இதன்போது தெரிவித்ததாவது:-

நேற்றுமுன்தினம் இணுவில் சந்திப் பகுதியில் இராணுவச் சிப்பாய் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் சிகை அலங்கரிப்பு நிலையத்தில் பணியாற்றிய பணியாளர் ஒருவர் கொல்லப்பட்டதன் பின்னர் அங்கு திரண்டிருந்த மக்கள் கொதிப்படைந்தனர்.

இந்த நிலையில் அங்கு விரைந்த பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசியதன் விளைவாகப் பொலிஸாருக்கும், மக்களுக்குமிடையில் மோதல் உருவானது. இதில் பொலிஸ் அதிகாரி கொல்லப்பட்டார்.

உயிர்கள் பெறுமதியானவை. எமது மண்ணில் உயிர்கள் இழக்கப்படக்கூடாது என்பதே விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு. நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நாம் யுத்தநிறுத்த உடன்படிக்கையை பேணி வருகின்றோம்.

தொடர்ச்சியாக தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வின்றியும்,போரால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கும், சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கும் தீர்வில்லாமலும் விரக்தியடைந்திருக்கும் மக்கள் இன்றைய சூழலில் இவ்வாறான இராணுவப் பாதிப்புக்களால் உயிர்கள் இழக்கப்படுகின்றபோது இயல்பாகவே ஆத்திரமடைகின்ற நிலைமை உருவாகின்றது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் படையினரும், பொலிஸாரும் பொருத்தமான அணுகுமுறைகளை மேற்கொள்ளாமல் மக்களை நெருக்குவாரத்துக்குள் தள்ளுவதனால் மேலும் நிலைமை சிக்கலடைகின்றது.

இதுவே யதார்த்தமுமாகும். இவ்வாறான சம்பவங்களை நாம் விரும்பவில்லை. எனவே, இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு படையினர் உறுதி வழங்க வேண்டும்.

அதேநேரத்தில் மக்கள் நெருக்கமாக வாழும் இடங்களில் ஆயுதங்களுடனோ அல்லது ஆயுதங்களை சுடும் நிலையிலோ கொண்டு செல்வது சட்டரீதியாகத் தடுக்கப்பட்டுக்கூட இங்கு மீறப்பட்டுள்ளது.

எனவே, இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது தடுக்கப்படவேண்டும். இவ்வாறு செய்வதால் மேலும் பிரச்சினைகள் வளர்வதற்கு வாய்ப்பில்லை. இந்த சம்பவங்களின் புலிகளைத் தொடர்புபடுத்துவது தவறானது மட்டுமல்ல உண்மைக்குப் புறம்பானதுமாகும்.

அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்ட நடவடிக்கைகளால் மக்களை இன்னும் கஷ்டத்துக்குள்ளாக்குவதுடன் கொதி நிலைக்கும் இட்டுச்செல்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

## விசாரணைக்குழு...

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொடவின் பணிப்பின்பேரில் - இராணுவ பொது அதிகாரிகளுக்கான பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் நந்த மல்லவாரச்சி மற்றும் நடவடிக்கைகள் இயக்குனர் பிரிகேடியர் ஜே.ஜெயசூரிய ஆகியோர் அடங்கிய குழு நேற்று யாழ்ப்பாணம் வந்தது.

இந்தக் குழுவினர் இணுவில் சம்பவம், அதன் பின்னணி தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவிருப்பதுடன், தற்போதய நிலைமை தொடர்பாகவும் அறிக்கை ஒன்றை இராணுவத் தளபதியிடம் சமர்ப்பிக்கவுள்ளனர்.

## சொந்தப் பாதுகாப்புடன்...

யாகவுள்ளனர். சர்வதேச பிரசன்னத்திலோ சிங்கள தேசம் எமக்குத் தீர்வைத்தருக்கும் வகையிலான எந்தவித அர்ப்பணிப்புக்களிலும் ஈடுபடவில்லை.

எமது போராளிகளின் பாதுகாப்பான பயணத்துக்கு 14 நாட்கள் காலக்கெடு கொடுத்து - ஒழுங்கான, பாதுகாப்பைத் தந்து நிலைமையைச் சீர் செய்யாவிட்டால் விடுதலைப் புலிகள் தமது சுயபாதுகாப்புடன் போக்குவரத்தைச் செய்வார்கள் என்பதைக் கூறியிருந்தோம். அதன்படி நடந்துகொண்டிருக்கிறது.

இதுகுறித்து மக்கள் சந்தேகப்படுவார்கள் என்று நான் நினைக்கவில்லை. இராணுவமோ, ஏனைய படைப்பிரிவுகளோ புலிகளின் பயணத்தைத் தடுத்தால் நிலைமைகள் மோசமடையும். தற்போது அவ்வாறான நிலை உருவாகவில்லை. ஆனால், எந்தநேரத்திலும் நிலைமைகள் மாறலாம்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் தெற்கில் ஏற்படும் மாற்றங்கள் சமாதானத்தைக் கொண்டு வருவதான தோற்றப்பாடுகளை உருவாக்கலாமே தவிர, தமிழ் பேசும் மக்களின் தீர்வு விடயத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்று எதிர்பார்க்க முடியாது.

இந்த நிலையில் புதிதாக வரப்போகின்றவர்கள் - தமிழ்பேசும் மக்களுக்குத் தீர்வைத் தருவார்கள் என்று நம்பவில்லை. மக்களே தற்போது தீர்மானம் எடுத்து விட்டார்கள் தங்களுடைய தலைவிதியைத் தாமே தீர்மானிப்பது என்று. அதனடிப்படையில் தமது செயற்பாடுகளை மக்கள் எடுத்து வருகிறார்கள்.

தெற்கிலுள்ள எந்தத் தலைவர்களையும் நம்பும் நிலையில் நாங்கள் இல்லை. எவர் தொடர்பாகவும் கருத்துக் கூறும் நிலையிலும் இல்லை.

போர்நிறுத்த உடன் படிக்கையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளை உடனடியாகச் செயற்படுத்தி - இயல்புநிலையை உருவாக்கி - இராணுவ நெருக்கடிகள் உட்பட சகல நெருக்கடிகளையும் நீக்க வேண்டும்.

அத்துடன், ஆயுதக் குழுக்களைப் பயன்படுத்தி நிழல் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். உடனடியாகவே இது நிறுத்தப்பட வேண்டும். ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களைய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். இவைகளைச் செய்வதன் ஊடாகத்தான் நிலைமைகளைச் சீராக்கலாம்.

பொதுக்கட்டமைப்பைச் செயற்படுத்துவதன் மூலம் எமது மக்களின் மத்தியில் நம்பிக்கைகளை உருவாக்கலாம். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தீர்வைக் காணும் அடுத்த கட்ட நடவடிக்கையில் இறங்கலாம். இவற்றை நடைமுறைப்படுத்தாவிட்டால் தற்போதைய நெருக்கடி நிலைமைகளைச் சீர்செய்ய முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஹெல்கிசனுக்கு...

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் தற்போதைய நிலைமை குறித்தும் பேச்சு நடத்தப்பட்டது. போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை அமுல்படுத்துவதன்மூலம் இந்த ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யலாம்.

இதன்மூலம் இருதரப்பினருக்கும் இடையே உள்ள புரிந்துணர்வை மேலும் மேம்படுத்தலாம்.

விடுதலைப் புலிகளுடன் மீண்டும் நேரடிப் பேச்சுவார்த்தையை அரசாங்கம் ஆரம்பிப்பதற்கான கடப்பாட்டையும் ஜனாதிபதி வலியுறுத்திக் கூறினார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தப் பேச்சுக்களின்போது இலங்கைக்கான நோர்வேயின் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் மற்றும் தூதுவராலய அதிகாரிகளும் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனுடன் பங்குபற்றினர்.

ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், சமாதான செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் ஜயந்த தனபால மற்றும் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## இறுதிச்...

பலாலியில் இருந்து நேற்று முன்தினம் இரவு கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்ட இவரது சடலம், பின்னர் குருநாகல் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு நேற்று காலை பிரேத பரிசோதனை நடத்தப்பட்ட பின்னர் மாலையே சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

நாளை குருநாகலில் அவரது இறுதிச் சடங்கு பூரண பொலிஸ் மரியாதையுடன் நடைபெறும்.

அதேவேளை, அத்தியட்சகர் விஜேவர்த்தனவுக்கு பதவி உயர்வும் -அவரது குடும்பத்தினருக்கு 5 லட்சம் ரூபா நஷ்டஈடும் வழங்குவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

## நேற்றிரவும்...

களையடுத்து நேற்றுமுன்தினம் இரவு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. நேற்றுப் பிற்பகல் 12.30 மணிக்கு நீக்கப்பட்ட இந்த ஊரடங்குச் சட்டம் நேற்றிரவு மீண்டும் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லை எனவும், நிலைமை கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் அமைதியை நிலைநாட்டவே யாழ் மாவட்டத்தில் இரவு நேர ஊரடங்குச் சட்டம் நேற்றிரவு 10 மணிமுதல் அமுல்படுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சந்திரிகா...

இதற்கு முன்னரும் இராணுவ பிரமாணங்களை மீறி நடந்துள்ளனர். இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவர்.

இந்தச் சம்பவம் பற்றி பூரண விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார். குழப்பங்களைத் தூண்டிவிடக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடுவோர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி முப்படைகளின் தலைவர்களுக்கும், பொலிஸ் மா அதிபருக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார். இந்தச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டோருக்கு பதவி உயர்வும், நட்டஈடும் வழங்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## இரண்டு...

நீதிமன்றில் விசாரணை நடைபெறவுள்ளது.

இதேவேளை இந்தச் சம்பவத்தின் பின்னர் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக எவரையும் பொலிஸார் தம்முன் ஆஜர்படுத்தவில்லையென மல்லாகம் மாவட்ட நீதிவான் சறோஜினி இளங்கோவன் மேலும் தெரிவித்தார்.

## பொலிஸ் மா...

பார்வையிடுவதற்காக யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இதேவேளை, பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவும் இன்று யாழ்ப்பாணம் வந்து சம்பவம் இடம்பெற்ற இடத்தைப் பார்வையிடுவதுடன், உயர்மட்ட பாதுகாப்புத் தரப்பினையும் சந்திக்க இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பொலிஸ்...

போடப்பட்டுள்ளன. நேற்றுமுழு நாளும் இந்த வீதிகள் மூடப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது.

# ஈ.பி.டி.பி தலைமையகத்தில் நள்ளிரவில் குண்டுவெடிப்பு!

கொழும்பு —

கொழும்பு நாரஹேன்பிட்டி பார்க் வீதியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இரவு 11.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக ஈ.பி.டி.பி தெரிவித்துள்ளது.

எனினும், பாரிய சேதங்கள் ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. கைக்குண்டு ஒன்று அலுவலகத்துக்கு வெளியில் இருந்து எறியப்பட்டதாகவே ஈ.பி.டி.பியினர் தெரிவித்தனர்.

இருப்பினும் அலுவலகத்தில் சுய பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்தாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, மட்டக்களப்பு - வாழைச்சேனையில் உள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்துக்கு அருகாமையில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் குண்டுவெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தின்போது எத்தகைய சேதங்களும் ஏற்படாத போதிலும், அருகிலுள்ள வீடொன்றிலிருந்த தந்தையும் மகளும் பொலிஸாரால் தாக்கப்பட்டனர்.

வெடித்துச் சிதறிய கைக்குண்டின் கிளிப் குறிப்பிட்ட வீட்டு வளவுக்குள் கண்டெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஈ.பி.டி.பி அலுவலகத்துக்கு பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸார் பொதுமக்கள் மீதான தாக்குதலை நடத்தியதாகவும், பின்னர் அந்த வீட்டுக்கு சென்ற பொலிஸார்அவர்களிடம் மன்னிப்புக் கோரியதாகவும் அறியவருகின்றது.

# ஆசிரியர் சம்பள நிலுவை இம்மாதக் கொடுப்பனவுடன்!

வடக்கு-கிழக்கில் பணியாற்றும் அதிபர் ஆசிரியர்களுக்கு இதுவரை காலமும் வழங்கப்படாதிருந்த சம்பள நிலுவையை இந்தமாத சம்பளத்துடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக மாகாண கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சம்பள நிலுவை வழங்குவதற்கான கட்டு நிதியினை கல்வி அமைச்சு வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைத்துள்ளது என்றும் அதனை இந்தமாத சம்பளத்துடன் சேர்த்து வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (10,04)

## பொலிஸாரின் கெடுபிடியால்...

பகுதிகளிலும் சுமுகமான நிலை காணப்பட்டபோதிலும் பின்னர் பொலிஸார் வலுக்கட்டாயமாக போக்குவரத்துக்களை நிறுத்தினர்.

நேற்றுக் காலை பருத்தித்துறை வீதியிலிருந்து சேவை ஆரம்பித்த வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களும், தனியார் சிற்றூர்திகளும் ஓரிரு சேவைகளுடன் பொலிஸாரால் இடைநிறுத்தப்பட்டன. காலை 7 மணிக்குப்பின் வடமராட்சிக்கும் ஏனைய பிரதேசங்களுக்குமான தொடர்புகள் முற்றாகத் தடைப்பட்டன.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற பஸ்கள் நெல்லியடி நகரப்பகுதியில் வைத்து பொலிஸாரால் திருப்பிவிடப்பட்டன. முகமாலைக்கான சேவையும் கொடிகாமத்தில் வைத்து திருப்பிவிடப்பட்டதால் 7 மணிக்குப்பின் எவ்வித போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெறாது முடங்கிக்கிடந்தன.

அத்துடன், வடமராட்சி பிரதேச பாடசாலைகளும் ஆரம்பமாகி சொற்ப நேரத்துடன் மூடப்பட்டு மாணவர்கள் வெளியேறியதையும் காணக்கூடியதாக இருந்தது. நெல்லியடி நகரத்தில் சந்தைகள், கடைகள் அனைத்தும் பொலிஸாரின் பணிப்பின் பேரில் மூடப்பட்டு நெல்லியடி நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

பிறபகல் 2 மணியளவில் ஜீப்களில் வந்த பொலிஸார் மந்திகை, நெல்லியடி,பருத்தித்துறை பகுதியில் பொதுமக்களை வீடுகளுக்குச் செல்லுமாறு விரட்டியடித்ததோடு, கடைகளை மூடுமாறும் பணித்தமையால் மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது. முகமாலை சோதனைச் சாவடியும் நேற்றுக்காலை திறக்கப்படவில்லை. முகமாலை நோக்கிச் சென்ற பயணிகள்மிருசுவில் சந்தியுடன் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

தென்மராட்சியில் ஏனைய பிரதேசங்களிலும் கடைகள் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகள், அரச அலுவலகங்களும் பொலிஸ் பணிப்பின் பேரில் மூடப்பட்டன.

யாழ். நகரப்பகுதியில் நேற்று அதிகாலை முதல் பதற்றம் நிலவிய போதும் - காலை 9 மணிக்குப்பின்னர் சந்திக்குச்சந்தி கூடி நின்ற பொலிஸாரும் ,படையினரும் பொதுமக்களின் போக்குவரத்தை முற்றாகக் கட்டுப்படுத்தினர்.

அத்தியாவசிய தேவைகளுக்குக் கூட மக்கள் வெளியில் நடமாடமுடியாத நிலை காணப்பட்டது. தீவகத்துக்கான போக்குவரத்து பண்ணைப்பாலத்துடன் தடுத்து நிறுத்தப்பட்டது. குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளுமே நேற்றுக் காலை 10 மணிக்குப் பின்னர் முற்றாக ஸ்தம்பித்திருந்தது.

அத்துடன், பொலிஸார் சில இடங்களில் பொதுமக்கள் மீதும் - வர்த்தக நிலைய உரிமையாளர்களுடனும் கடுமையாக நடந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மானிப்பாய், சுதுமலை, இணுவில், சுன்னாகம் ஆகிய பகுதிகளில் அதிகளவான இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

நேற்றுக் காலை எந்த அசம்பாவிதங்களோ, பதற்றமோ உருவாகாத போதும் - பொலிஸார் ஊரடங்கு மற்றும் கெடுபிடிகளால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டும், பதற்றமான ஒரு சூழலும் உருவாக்கப்பட்டது.

எனினும், நேற்றுப் பிற்பகல் 12.30 மணியுடன் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டபோதும் - மக்கள் நடமாட்டம் மிகக் குறைவாகவே காணப்பட்டன. வர்த்தக நிலையங்கள் சிலவே திறந்திருந்தன.

போக்குவரத்துச் சேவை முற்றாக தடைப்பட்டிருந்ததால் முகமாலை ஊடாக வந்த பயணிகளும், தொலை தூரத்தில் இருந்து வந்தவர்களும் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

இதேவேளை நேற்று மாலை தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய கொடியேற்றத் திருவிழா வில் ஆயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். பொலிஸாரின் ஊரடங்குச் சட்டத்தின் மத்தியிலும் சந்நிதி உற்சவம் சிறப்புற ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது.

COMING SOON
Mango's
FAMILY VEG.RESTAURANT C/4349

## முக்கிய அறிவித்தல்

04.08.2005 அன்று இணுவில் பகுதியில் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி மரணமடைந்த எமது ஒன்றிய அங்கத்தவர் ஜெயசீலன் சாந்தரூபன் அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் - யாழ்.மாவட்ட அனைத்து கிளைச்சங்க சிகை அலங்கரிப்பு நிலையங்களையும் இன்று (06.08.2005) மூடி - நாளை (07.08.2005 ) 2 மணியளவில் நடைபெறும் அவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

சிகை அலங்கரிப்பாளர்
சங்கங்களின் ஒன்றியம்
யாழ்.மாவட்டம்.

(2007)

S.ரகு
தலைவர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.08.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.